6 JUL 1932

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-௩௰] ஆங்கீரஸ வருஷ சித்திரைமீ [பகுதி-௬.
Vol. XXX. April-May-1932. No. 6.

உள்ளுறை.


மணிமேகலையாராய்ச்சி:—ஸ்ரீமத். வை. சுப்பிரமணிய ஐயர் — கஙஎ

திருப்புறம்பயத்துக் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் கண்ட சில செய்திகள்:— ஸ்ரீமத். வை. சுந்தரேச வாண்டையார் — கசகூ

யவனமஞ்சரி:— ஸ்ரீமத். த இராமநாதபிள்ளை, B.A. — கருங

ஆங்கிலத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— I—IV.

தனித்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— V.

மதிப்புரை:— VI—VIII.

குருகைமான்மியம்:- T. K. இராமாநுஜையங்கார் 97—112

மதுரை மும்மணிக்கோவை முகவுரை முதலியன:— ஸ்ரீமத். மஹாமஹோபாத்யாய-தாக்ஷிணாத்யகலாநிதி-Dr. வே சாமிநாதையர்.


பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.
வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.
1932.

...u RAJA M. DINAKARA BAHADUR AVL, and
THIRU. NARAYANA IYENGAR, at the
...ver Press, No. 54, New Jail Road Madura.

21530

# ஒரு வேண்டுகோள்.

---

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும், மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராதிபர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும் பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவைசம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
மதுரை. } லக்ஷ்மீநாராயணையர்,

16 JUL 1932

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௩௦] ஆங்கிரஸ ௵ சித்திரை ௴ [பகுதி-௬.

Vol. XXX. April-May-1932. No. 6.

## மணிமேகலை* யாராய்ச்சி.

செந்தமிழ்ப்புலவர்களே! இந்திரன்முதலிய இறைவர்பதங்களும் அந்தமிலின்பத் தழிவில்வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன. அந்நான்கனையும் பயப்பிப்பது, வெள்ளத்தாற் போகாததும், வேந்தராலுங் கொள்ளப்படாததும், தாயத்தார் கள்வர் வலியரென்றிவராற் கொள்ளப்படாததும், வழிபட்டார்க்குக் கொடுத்தழிக் குறையாததும், வெந்தணலால் வேவாததும் எளிதான காவலையுடையதுமாகிய விழுமிய கல்வியேயாமென்பது யாவர்க்குமொப்பமுடிந்ததோருண்மை. அவ்வுண்மையினை,

"அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை".

"எழுத்தறியத் தீரு மிழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்"

---

*இது, திருவாளர் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், (M.L.C.) அவைத்தலைவராக வீற்றிருக்க நிகழ்ந்த மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை மாணவர் ஞானபிவிருத்திஸபையின் 28-ம் வருடக் கொண்டாட்டத்தில் ஷை கலாசாலை மாணவன் வை. சுப்பிரமணியனால் எழுதிப் படிக்கப்பட்டது.

என்னும் பெரியார்வாக்குக்களா லறியலாம். அத்தகைய சீரியகல்வியைக் கற்றற்குரிய நூல்கள் பலவற்றுட் காப்பியங்களு மடங்கியனவாகலின் நுண்மாண் நுழைபுலமிக்காராற் றொகுத்துக்கூறப்பெற்ற சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி யென்னு மைம்பெருங்காப்பியங்களி லொன்றாகிய "மணிமேகலை"யா லறியக்கிடக்குஞ் சில விஷயங்களை ஈண்டுச் சிறியேன் கூறப்புகுந்துள்ளேன். அவற்றிற் பிழைகள் காணப்படிற் பொறுத்தருளுமாறு பெரிதும் வேண்டுகின்றனன்,

இந்நூல் சிலப்பதிகாரக் கதைத்தலைவனான கோவலன் மகளாகிய மணிமேகலை என்பவளுடைய சரித்திரத்தைக் கூறுதலின் சிலப்பதிகாரத்தோடு கதைத்தொடர்புடையது. இதில், சோழவளநாட்டுள்ள காவிரிப்பூம்பட்டினத்திற் பெருங்குடிவாணிகர்மரபி லுதித்த கோவலனுக்கு மாதவி யென்னும் நாடகக்கணிகையிடத்துத் தோன்றிய மணிமேகலையென்பவள், தன்னுடைய தாய், கோவலன் மதுரையில் வெட்டுண்டிறந்ததுகேட்டுப் பரத்தமைத்தொழிலை வெறுத்துப் பௌத்தமுனிவராகிய அறவணவடிகளைச் சரணடைந்து வாய்மைநான்குஞ் சீலமைந்துமுபதேசிக்கப்பெற்றுப் பௌத்தசங்கத் திருத்தலை யறிந்து அவளோடு பழகிச் சிறுபிராயத்திலேதானே பௌத்ததருமங்களையறிதற்கேற்றவுணர்ச்சியுற்று ஒருநாள் தன் தாயின் கட்டளைப்படி சுதமதியுடன் பூக்கொய்தற்கு மலர்வனஞ்சென்று தன்னை விரும்பிவந்த உதயகுமாரனுக்கஞ்சி அங்குள்ள பளிக்கறையி லொளித்திருந்து அவன் போனபின்பு வெளியேவந்து தன் குலதேவதையாகிய மணிமேகலாதெய்வத்தால் மணிபல்லவத்தீவிற்குக் கொண்டுபோகப்பட்டு அத்தீவிலுள்ள புத்தபீடிகைக் காட்சியாற் றன் பழம்பிறப்பி னிகழ்ந்த செய்திகளை யறிந்து அப்பால் அத்தெய்வமறிவுறுத்திய மூன்று மந்திரங்களை யுணர்ந்து முற்பிறப்பிற் கணவனாயிருந்த இராகுலனென்பவனே இப்பிறப்பில் உதயகுமாரனாக வந்தானென்று அத்தெய்வம் புகலக்கேட்டுப் பிறகு அப்புத்தபீடிகையின் காவற்றெய்வமாகிய தீவதிலகையினுதவியாற் கோமுகியென்னும் பொய்கையையடைந்து அதிலுள்ள அக்ஷயபாத்திரந் தன்கையில் வரப்பெற்றுப் பின்னர்க் காவிரிப்பூம்பட்டினத்தைச்சார்ந்து அறவணவடிகளையடைந்து ஆபுத்திரன்வரலாற்றையும் அவனுக்கு மதுரையிற் சிந்தா



தேவி அமுதசுரபியைக்கொடுத்ததையும் பசித்தவுயிர்களுக்குணவளித்தலே யெல்லாவற்றினும் மேலானதருமமென்பதையும் அவர் கூறக்கேட்டு அவர் கூறியவாறே உணவளித்தற்பொருட்டு அமுதசுரபியைக் கையிலேந்திக்கொண்டு வீதியிற்சென்று சிறந்த பத்தினியாகிய ஆதிரையென்பவள் முதலிற் பிச்சையிடப்பெற்றுக் காயசண்டிகையென்னும் வித்தியாதரமங்கையின் றீராப்பசியைப் பாத்திரத்திலிருந்தெடுத்துதவிய வொருபிடியமுதாற் போக்கி அப்பாத்திரத்திலே மேன்மேலமுதுவளரப்பெற்று அந்நகரத்துள்ள உலக அறவி என்னும் அம்பலத்தையடைந்து அங்கேவந்த எல்லா உயிர்களின் பசியையும் போக்கி அவ்வறஞ்செய்தலையே நித்தநியமமாகப்பூண்டு தன்னை விரும்பிவந்த உதயகுமாரனறிந்துகொள்ளாவண்ணம் மேற்கூறிய காயசண்டிகையின் வடிவங்கொண்டு அந்நகரத்துள்ள சிறைச்சாலையை அடைந்து அங்கே பசித்திருப்பவர்களுக்கெல்லாம் உணவளித்து அதனை யறச்சாலையாக்கித் தன்னை மீட்டும் விடாது தொடர்ந்த உதயகுமாரன் காயசண்டிகையின்கணவனால் வெட்டுண்டு வீழ்ந்ததுகண்டு மனங்கலங்கிப் பின்பு கந்திற்பாவைத்தெய்வத்தின் மொழிகளாற் றேறுதலுற்று உதயகுமாரனுடையதந்தையாகிய மாவண்கிள்ளியாற் சிறையில்வைக்கப்பட்டு இராசமாதேவியின்முயற்சியாற் சிறையினின்றும் நீங்கி நாகபுரத்தையடைந்து அதன் தலைவனான புண்ணியராசனோடு மணிபல்லவஞ்சார்ந்து புத்தபீடிகையைக் காட்டி அதனாலவனது பழம்பிறப்பை யவனுக்கறிவித்துக் காவிரிப்பூம்பட்டினங் கடல்கொள்ளப்பட்டசெய்தியைத் தீவதிலகையா லறிந்துகொண்டு அப்பாற்சென்று வஞ்சிநகர்ப்புறத்தேயுள்ள பத்தினிக்கடவுளாகிய கண்ணகியின்கோயிலையடைந்து தரிசித்துத் தன்னுடைய எதிர்காலச்செய்திகளைக் கண்ணகித்தெய்வங்கூற வறிந்துசென்றாங்கிருந்த சமயவாதிகள் பலரையுஞ் சார்ந்து அவர்களுடைய கொள்கைகளைத் தனித்தனியே வினவியுணர்ந்து அந்நகரிற் றவம்புரிந்துகொண்டிருந்த மாசாத்துவானைக் கண்டு அவன் மொழிந்த செய்திகள் பலவற்றையுங் கேட்டு அவன் கூறியவாறு காஞ்சிநகரஞ்சென்று அந்நகரிற் பசியால் வருந்தி வாடிய எல்லாவுயிர்களுக்கும் உணவளித்து அங்கேவந்த அறவணவடிகளைத் தரிசித்து அவருபதேசித்த அறமொழிகளைக்கேட்டுப் பின் முத்திபெறுதற்பொருட்டு அந்நகரிலேயே தவஞ்செய்துகொண்டிருந்தாளென்னுங் கதை விரித்துக் கூறப்படும்.

அம் மணிமேகலையின்சரித்திரத்தை விரித்துக்கூறுதலின் மணிமேகலைபென்றிதற்குப் பெயராயிற்று. திருவொற்றியூர் ஞானப்பிரகாசர், சமயதிவாகரவாமனமுனிவராகிய இவர்கள் வாக்கால் இதற்கு "மணிமேகலைத்துறவு" என்று மக்காலத்துப் பெயர் வழங்கப்பட்டுவந்ததாகத் தெரிகிறது. "மணிமேகலைதுற—வாறைம்பாட்டினு ளறியவைத்தனனென்" என்று பதிகத்திறுதியிற் கூறப்பெற்றிருத்தலும் இதற் கிப்பெயருண்டென்பதை வலியுறுத்தும். இதிற் கூறப்பட்ட சரித்திரம் நிகழ்ந்தகாலமும் இந்நூலாசிரியர்காலமு மொன்றென்றும், இது அவராற் றமிழிலேதான் முதலிற் பாடப்பட்டதென்றும் சிலப்பதிகாரத்தாலும் அதன்பதிகத்தொடக்கத்தில் அடியார்க்குநல்லார் எழுதிய உரைநடையாலும் இந்நூற்பதிகத்தாலும் விளக்குகின்றமையின் இது வேறு மொழியிலிருந்துவந்ததென்றுசொல்லுதற் கிடமில்லை. இது மலை, கடல், நாடு, நகர், தீவு, வனம், ஆறு முதலியவற்றையும் பிறவற்றையும் நேரிலறிந்துகொண்டாற்போலப் படிப்பவர்களுக்கு நன்றாகப் புலப்படச் செய்யும் நலப்பாடுடையது. இயற்கையின் பமிலங்கப்பெற்றது. சில சீரிய உண்மைகளைப் புலப்படுத்துவது. இதன் சொல் நுட்பம் பொருள் நுட்பங்கள் நூலளவேயாகிய நுண்ணறிவுக்கேற்ப யாண்டுங்காணப்படுமென்பர். இதனை,

"மந்தா கினியணி வேணிப் பிரான்வெள்ளை மன்னவரீ
கொந்தார் குழன்மணி மேகலை நானுட்பங் கொள்வதெங்ஙன்
சிந்தா மணியுந் திருக்கோ வையுமெழு திக்கொளினு
நந்தா வுரையை யெழுதலெவ் வாறு நவின்றருளே"

என்று கவிஞர்பெருமானாகிய துறைமங்கலம் சிவப்பிரகாசமுனிவரருளிச் செய்த வெங்கைக்கோவைச்செய்யுளா னறியலாம்.

இவ்வுயரிய நூலையியற்றியவர் கடைச்சங்கப்புலவருளொருவராகிய சீலமார் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனா ரென்னும் புலவர் பெருமானவர். இவர் வணிகமரபினர். கூலவியாபாரஞ்செய்துகொண்டிருந்தமையின் இவர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனாரெனப் பெயர் பெற்றார். மதுரைச் சீத்தலைச்சாத்தனார் எனவும் பெயர் பெறுவர். சாத்தனா ரென்பது இயற்பெயர். இவரைப்போலவே பொன்வாணிகனார், முதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார், மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனார் முதலிய வணிகமரபினர் சில ரிருந்தனரென்று தெரிகின்றது. இவர் பத்தினிக்கடவுளாகிய கண்ணகியின்வரலாற்றையும் அவள் மேம்பாட்டையுஞ் சேரன்செங்குட்டுவனுக் கறிவுறுத்தி யவனைக்கொண்டு அவளுக்குக் கோயில்கட்டுவித்து நித்தியபூசை முதலியன நடக்கும்படி செய்தவர். சிலப்பதிகாரத்தை இளங்கோவடிகளியற்றுவதற்குக்காரணமாயிருந்தவரும் அச்சிலப்பதிகாரத்தைக்கேட்டவரு மிவரே. நற்றிணை முதலிய நூல்களில் இவர் பாடியனவாகச் சிலசெய்யுட்கள் காணப்படுகின்றன. "தண்டமிழ்ச்சாத்தன்" என்றும் "தண்டமிழாசான் சாத்தன்" என்றும் "நன்னூற்புலவன்" என்றும இவர் சிலப்பதிகாரத்துப் பாராட்டப்பட்டிருக்கின்றனர்.



இனி நூலுட்புகுந்து மேற்கூறியாங்குச் சிலவிஷயங்களைச் சொல்லுவல்.

## இந்திரவிழா.

நம் சீரிய பரதகண்டமானது பண்டைக்காலத்தில் நாகரிகங்களாற் சிறந்து விளங்கிற்றென்பது எல்லோரு மொப்பத்தகுந்ததோர் விஷயம். அப்பரதகண்டத்தின் ஒருபகுதியாகிய நங் கன்னித் தண்டமிழ்நாடு நாகரிகங்களுக்கே பிறப்பிடமாயிருந்ததென்று கூறுதல் தகுதியுடைத்தாம். நம் பைந்தமிழ்நாடு அரசியல், கல்வி, போர்த்தொழில் கைத்தொழில், வாணிகம், சிற்பம் முதலியவைகளில் ஓர்காலத்தில் எந்நாடுஞ் சமமில்லையென்று கூறுமாறு சிறப்புற்றிருந்ததென்பது நந்தேசத்தாரும் பிறதேசத்தாருங் கண்டதே. அஃதாவது இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்குமுன்னரே அத்தகைய மேலானநிலையிலிருந்ததென்பது சரித்திர ஆசிரியர் பெரும்பாலாருடைய மதம். அதற்குப்பின் வரவர நாகரிகத்திற் குறைவையடையத்தொடங்கிவிட்டது. ஏடுகளிலும் சிலாசாசனங்களிலுந் தண்டமிழ்நாடு சிறப்புற்றிருந்ததென்று பொறிக்கப்பட்டிருக்கும் பல்வளவுகளுமே இருக்கிறது. மேற்கூறிய நாகரிகக்குறிகள் பல இறந்துபட்டனவாயினும் அவை நந் தெய்வத்தமிழ்நாட்டி லித்தன்மையனவாக இருந்தனவென்பதை நம் பண்டைத் தமிழ்நூல்களுட் சில நமக்குத் தெரிவிக்குங் கருவிகளாயிருத்தலின் அவற்றிலுள்ள ஒவ்வொரு விஷயங்களையும் ஆராய்ந்து வெளிப்படுத்தல் தமிழருடைய முதற்கடமையாகும்.

அவ்வாறு பண்டைத் தமிழ்நூல்களிற் கூறப்பட்ட விஷயங்கள் பலவற்றுள்ளும் இப்பொழுது யான் கூறப்புகுந்த இந்திரவிழா என்பதுமொன்று.

அவ்விழா, தேசநலத்தின்பொருட்டுத் தேசத்துக்குடிகளாலும் மன்னர்களாலுஞ் செய்யப்பட்டுவந்தது. இந்திரனைக்குறித்துச் செய்யப்பட்டமையா லிதற்கு இந்திரவிழா எனப் பெயராயிற்று. முற்காலத்தில் நாவலந்தீவிலுள்ளார்க்கு அசுரரால்வருந் தீங்கைப் பரிகரித்தற்பொருட்டு அத்தீவின் காவற்றெய்வமாகிய சம்பாபதியால் அவ்விழா இந்திரன் பொருட்டுச் செய்யப்பட்டமையால் "தீவகச்சாந்தி" எனவும் ஒரு பெயருண்டு. இவ்விழாவானது தமிழ்நாட்டிற் காவிரிப்பூம்பட்டினத்திற் செய்யப்பட்டதாக இந்நூலும் சிலப்பதிகாரமுங் கூறுகின்றன. வடநாட்டிற் பெரும்பாலான இடங்களிற் செய்யப்பட்டதாக வடநூல்களுஞ் சில கூறுகின்றன. இவ் விந்திரவிழா ஆயிரங்கண்ணோன்விழா எனவும் இந்திரகோடணைவிழா எனவும் இந்நூலில் வழங்கப்பெறும். பண்டைக் காலத்திற் காவிரிப்பூம்பட்டினத்தை வளப்படுத்த நினைந்த மிகத்தெளிகேள்வி அகத்தியனுடைய கட்டளையின்படி தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியனென்னுஞ் சோழன் இந்திரனைவணங்கி அவனனுமதி பெற்று இருபத்தெட்டுநாட்கள் இவ்விழாவை நடத்தினான். அவனுக்குப் பிறகு அவன் பரம்பரையோராலும் அவ்வாறே நடத்தப்பட்டுவந்தது. அவ்விழாவைப் பிற்காலத்திலும் நடத்தநினைந்த பலசமயக்கணக்கர்களும், அமயக்கணக்காகளும், தெய்வவடிவைமறைத்து மனிதர்கண்ணுக்குப் பொறுக்குமளவினதாகிய உருவத்தை யெடுத்துவந்துள்ள தேவர்களும், மாக்கலந்தருஞ் செல்வப்பொருட்டால்வந்த பலபாஷைமாக்களும், தமிழரசியலை அலங்கரித்துவரும் அமைச்சர், புரோகிதர், சேனபதியர், தூதுவர், சாரணர் என்று கூறப்படும் ஐம்பெருங்குழுவினரும், கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், இவுளிமறவர் என்று கூறப்படும் எண்பேராயத்தரும் ஒருங்குகூடி, இந்திரவிழாவை நாம் மறந்தால் முசுகுந்தனது துயரைப் போக்கியதான நாளங்காடிப்பூதந் துன்பஞ்செய்யும்; தவமறைந்தொழுகுந் தன்மையிலாளர், அவமறைந்தொழுகு மலவைப் பெண்டிர், அறைபோகமைச்சர், பிறர்மனைநயப்போர், பொய்க்கரியாளர்,



புறங்கூற்றாளராகிய பாவிகளைப் புடைத்துண்ணுஞ் சதுக்கப்பூதம் இந்நகரைவிட்டு நீங்கும்; ஆதலால் இவ்விழாவை நடத்துவோமாகவென்று தம்முணிச்சயித்துக்கொண்டு அவ்விழா நடக்கப்போதலை நகரமாந்தர்க்கறிவிக்குமாறு முரசறைவோனுக்குச் சொல்ல அவன் வச்சிரக்கோட்டத்துள்ள முரசை யானையின்பிடரிலேற்றி முதலில் ஊரை வாழ்த்தி "மேகம் மாதந்தோறும் மும்மழை பொழிக; அரசன் கோடாதகோலினனாகுக; அறிஞர்களே! இந்திரவிழா நடக்குங்காலத்திற் சுவர்க்கலோகம் வறிதாம்படியெல்லாத்தேவர்களும் அதனை நீங்கி யீண்டெழுந்தருளுவாரென்பது பெரியோர்கள் துணிபாகலின் வீதிமுதலியவைகளிற் பூரணகும்பங்களும் பொற்பாலிகைகளும் பாவைவிளக்குக்களும் பரவவைத்திடுமின்; குலைக்கமுகும், குலைவாழையும், கரும்பும், வஞ்சிக்கொடியும், பூங்கொடியுமாகிய இவற்றைக் கட்டவேண்டியஇடங்களிற் கட்டுமின்; பத்திவேதிகைப் பசும்பொற்றூணங்களில் முத்துத்தாமங்களை முறைமுறை நாற்றுமின்; நகரவீதிகளிலும் மன்றங்களிலுமுள்ள பழமணல்களையெல்லாம் மாற்றிப் புதுமணல் பரப்புமின்; கதலிகைக்கொடி, காழூன்றுவிலோதம் முதலிய துகிற்கொடிவிசேடங்களை மாடங்களிலும் வாயில்களிலுஞ் சேர்த்துமின்; சிவபிரான், சதுக்கப்பூதம், நாளங்காடிப்பூதம் முதலிய தெய்வங்களுறையுங் கோயில்களுக்குச் செய்யவேண்டிய சிறப்புக்களைச் செய்ம்மின்; தண்மணற்பந்தர்களிலுந் தாழ்தருபொதியில்களிலுந் தருமோபதேசஞ்செய்ய அறிந்தவர்கள் தருமோபதேசஞ் செய்ம்மின்; பலப்பல சமயவாதிகளும் பட்டிமண்டபம் என்ற வித்தியாமண்டபத்திற் சேர்ந்து தத்தஞ் சமயவாதங்களைப் புரிமின்; பற்றுமாக்கடம்முடனாயினுஞ் செற்றமுங் கலாமுஞ்செய்யாதகலுமின்;" என்றுகூறிப் 'பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனுஞ் சுரக்க' என வாழ்த்தி முரசறைந்து இந்திரவிழாவைத் தெரிவிக்க அம்முறையே விழாவைக் கொண்டாடினார்கள் என விழாவறைகாதையா லறிகின்றோம். இன்னும் அவ்விழா நடக்கும்போது தெருக்களிற் கூத்துக்கள் நடைபெறும். நாடகமேடைகளிலே நாடகமடந்தையர் தாங் கற்ற பரதசாஸ்திரத்தைச் சபையோர்கண்டுகளிக்குமாறு நடித்துக்காட்டுவார்கள். விழாமுடிவின்கண் எல்லோரும் நீர்விளையாடிக் களிப்பார்கள். அவர்களிவ்வாறாக விழாவைக் கொண்டாடுவதால் மன்னர்கள் தம் பகைவரை வெற்றிகொண்டு இன்னும் விரிவான பூமியை யடைவார்கள். மன்னர்களுங் குடிகளு மிவ்விழாவினைக் கொண்

டாடுவாராயின் அவர்கள் தேசங்களுக்கும் அவர்களுக்கும் வெற்றியும் சகல செல்வங்களும் உண்டாகும்; எல்லாப்பயிர்களுங் கெடுதியில்லாம லிருக்கும்; இராக்ஷதர்களும் பிசாசர்களும் அவைகளுக் கெவ்விதத்திலும் கேடுசெய்யமாட்டார்களென்ற தெய்வநம்பிக்கைகொண்டுசெய்து வந்தார்க ளென்று தெரிகின்றது. இந்த இந்திரவிழாவைப்போலவே முருகன், திருமால், வருணன் முதலிய தெய்வங்களுக்கும் விழாச் செய்து வந்தார்க ளென்று பண்டைத் தமிழ்நூல்களால் நன்கு அறியலாம். இக்காலத்து நடத்தப்படும் பல விழாக்களிலும் மேற்கூறிய சிறப்புக்களில் ஒன்றை யாவது காண்கின்றோமா? இல்லை; இல்லை; அநேகமான சண்டைகளும் சச்சரவுகளும் முதலிய மாறுன விஷயங்களைத்தான் காண்கின்றோம். அவையெல்லா மொழிந்து நடத்தப்பெறுமாறுற்றான் தேசஞ்செழித்துச் சீரடையும் என்பதை நந்நாட்டவர் நன்குணரவேண்டும்.

## கைத்தொழில் வாணிகம் முதலியவை.

ஒருதேசம் முன்னேற்றமடையவேண்டுமாயின் அத்தேசத்திற் கைத் தொழில், வாணிகம் முதலியவை சிறந்திருத்தல்வேண்டும். அவை சிறப்புற்றிருந்தாற்றான் தேசம் முன்னேற்றமடையமுடியும் என்பது கண்கூடானவிஷயம். இற்றைக்கு முன்னேற்றமடைந்திருக்குந் தேசங்க ளாகிய அமெரிக்கா, இங்கிலாந்து, சைனு, ஜப்பான் முதலிய தேசங்களை யெடுத்துக்கொண்டு எதனாலவை முன்னேற்றமடைந்துள்ளன வென்ப தைத் தெளிய ஆராய்வோமாயின் கைத்தொழில் வாணிகம் முதலிய வற்றாற்றான் அவை முன்னேற்றமடைந்திருக்கின்றன என்று கூற வேண்டும். இது யாவருமறுக்கொணுதது. இத்தகைய கைத்தொழில் வாணிகமுதலியவை நந் தீந்தமிழ்நாட்டிற் சிறந்திருந்தனவென்பதையும், செல்வச்சிறப்பிலும் அமராவதிகூடத் தனக்கு நிகரில்லையென்றுகூறுமாறு விளங்கிற்று நம்நாடு என்பதையும் பண்டைத்தமிழ்நூல்களால் அறியலாம். அவைவிருந்தநிலையையும் இம் மணிமேகலையைக்கொண்டு சிறிது ஆராய்வோமாக.

மணிமேகலையானவள் பல சமயவாதிகளைச்சார்ந்து அவர்களுடைய கொள்கைகளைக் கேட்டபிறகு மாதவியையும் சுதமதியையும் அறவண வடிகளையுங் காணவிரும்பி வஞ்சியின்புறநகரைக்கடந்து அகநகரிற் போய்ப் பலவகைச்சாதியாரும் இருத்தற்குரிய வீதிகளையும் வேறுள்ள



பல இடங்களையும் கண்டு மகிழ்வுற்றுச்சென்றாள் என்றதைக் கூறுமிடத்து,

“கடைகாப் பமைந்த காவ லாளர்
மிடைகொண் டியங்கும் வியன்மலி மறுகும்
பன்மீன் விலைஞர் வெள்ளுப்புப் பகருநர்
கண்ணொடை யாட்டியர் காழியர் கூவியர்
மைந்நிண விலைஞர் பாசவர் வாசவர்
என்னுநர் மறுகு மிருங்கோ வேட்களுஞ்
செம்பு செய்ஞ்ஞருங் கஞ்ச காரரும்
பைம்பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரும்
மரங்கொஃ றச்சரு மண்ணீட் டாளரும்
வரந்தர வெழுதிய வோவிய மாக்களும்
தோலின் றுன்னருந் துன்ன வினைஞரு
மாலைக் காருங் காலக் கணிதரு
நலந்தரு பண்ணுந் திறனும் வாய்ப்ப
நிலங்கலங் கண்ட நிகழக் காட்டும்
பாண ரென்றிவர் பல்வகை மறுகும்
விலங்கரம் பொரூஉம் வெள்வளை போழ்நரோ
டிலங்குமணி வினைஞ ரிரீஇய மறுகும்
வேத்தியல் பொதுவிய லென்றிவ் விரண்டின்
கூத்தியல் பறிந்த கூத்தியர் மறுகும்
பால்வே றாக வெண்வகைப் பட்ட
கூலங் குவைஇய கூல மறுகு
மாகதர் சூதர் வேதாளிகர் மறுகும்
போகம் புரக்கும் பொதுவர்பொலி மறுகுங்
கண்ணுழை கல்லா நுண்ணூற் கைவினை
வண்ண வறுவையர் வளந்திகழ் மறுகும்

பொன்னுரை காண்போர் நன்மனை மறுகும்
பன்மணி பகர்வோர் மன்னிய மறுகு
மறையோ ருந்தொழில் குறையா மறுகு
மரைசியன் மறுகு மமைச்சியன் மறுகு
மெனைப்பெருந் தொழில்செ யேனோர் மறுகு
மன்றமும் பொதியிலுஞ் சந்தியுஞ் சதுக்கமும்
புதுக்கோள் யானையும் பொற்றார்ப் புரவியுங்
கதிக்குற வடிப்போர் கவின்பெறு வீதியுஞ்
சேணோங் கருவி தாழ்ந்தசெய் குன்றமும்
வேணவா மிகுக்கும் விரைமரக் காவும்
விண்ணவர் தங்கள் விசும்பிட மறந்து
நண்ணுதற் கொத்த நன்னீ ரிடங்களுஞ்
சாலையுங் கூடமுந் தமனியப் பொதியிலுங்
கோலங் குயின்ற கொள்கை யிடங்களுங்
கண்டு மகிழ்வுற்றுச்"

சென்றனள் என்று கூறுகின்றார்.

இதன்பொருள்:—வாயில்காத்தற் கமைந்த காவலாளர்கள் நெருங்குதல்கொண்டியங்கும் பெருமைபொருந்திய தெருக்களும், பலமீன்களை விலைக்குவிற்கும் மீன்விலைப்பரதவர், வெள்ளிய வுப்புவிற்பார், கள்ளை விற்கும் வலைச்சியர், பிட்டுவாணிகர், அப்பவாணிகர், ஆட்டுவாணிகர், இலைபழுதிடுவார், கயிறுதிரித்து விற்பார், பச்சிறைச்சி சூட்டு இறைச்சி விற்பார், தக்கோலம், ஏலம், இலவங்கம், கற்பூரம், சாதிக்காய் என்னும் பஞ்சவாசங்களை விற்பார் ஆகிய இவர்கள் மறுகும், குயவருஞ் செம்பு கொட்டிகளும், வெண்கலக்கன்னார்களும், பொற்பணிசெய்வோரும், உருக்குத்தட்டார்களும், மரத்தை வெட்டும் தச்சரும், சிற்பாசாரிகளும், தையாற் பாவையுள்ளிட்டன பண்ணுவார்களும், சித்திரகாரிகளும், செம்மார்களும், தையற்காரரும், மாலைதொடுப்போர்களும், சோதிட நூலோர்களும், இசைப்பாணரும், யாழ்ப்பாணரும் மண்டைப்பாணருமாகிய பலவகைப் பாணர்களும், சங்கறுத்துத் தொழில்செய்வாரும், முத்துக் கோப்பார்களும் ஆகிய இவர்கள் தங்கியிருக்கப்பெற்ற வீதிகளும், கூத்தியல்புகளையறிந்த கூத்தியர்வீதிகளும், நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, சோளம், தோரை, மூங்கில்நெல் முதலிய எண்வகைக் கூலங்கள் குவித்துள்ள வீதிகளும், அரசவையிருந்தேத்துவார் நின்றேத்துவார் பலவகைத் தாளத்திலாடுவாராகிய இவர்கள் வீதிகளும், பொதுமகளிர் பொருந்திய வீதிகளும், கண்கள் நுழையமுடியாத அவ்வளவு நுட்பமான நூலைக்கொண்டு பலநிறங்களையுடைய உடைநெய்வோர்களுறப்பெற்ற வளம்பொருந்திய வீதிகளும், பொன்னையுரைத்தவுரையை யறுதியிடும் பொன்வாணிகருடைய நல்லவீதிகளும், பலவகைப்பட்ட இரத்தினங்களைவிற்கும் வாணிகர்பொருந்திய வீதிகளும், அந்தணர்வீதிகளும், அரசர்பெருந்தெருவும், மந்திரிகள்தெருக்களும், சேனாதிபதிகள் முதலியோர்களுடைய தெருக்களும், மன்றங்களிலும் அம்பலங்களிலும் சந்திகளிலும் புதியவாகப் பிடிக்கப்பட்டுவந்த யானைகளையுங் குதிரைகளையும் நடையில் மேம்பாடுறப் பயிற்றும் யானைப்பாகரும் வாசிவாரியரும் பொருந்திய அழகிய வீதிகளும், மிகவுமுயர்ந்த கட்டுமலைகளும், கண்டோர்கண்ணைக் கவரக்கூடிய அழகும் நல்ல மணமும் பொருந்திய மரச்சோலைகளும், தேவர்கள் தங்கள் விசும்பிடத்தையு மறந்துவந்து பொருந்தியிருத்தற்கொத்த நன்னீர்கள் நிரம்பிய பொய்கை முதலியவைகளும், அறச்சாலைகளும், கூடங்களும், பொன்னாலாகிய அம்பலங்களும் சித்திரமெழுதப்பெற்ற விரதங்களை யனுட்டித்தற்குரிய தவச்சாலைகளுமாகிய இவற்றைப் பார்த்து மகிழ்ச்சிகொண்டு" போனாள் என்பதாம்.



இதனாலும், "தேவர் கோமான் காவன் மாநகர், மண்மிசைக் கிடந்தென வளந்தலை மயங்கிய பொன்னகர்" எனக் கச்சிமாநகரைச் சிறப்பித்துக்கூறு மடிகளாலும்,

"வம்ப மாக்கள் கம்பலை மூதூர்ச்
சுடுமண் ணோங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை யுயிர்களு முவமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவ ரோவியம்"

பொருந்திய தெருக்களையுடைய காவிரிப்பூம்பட்டினமெனக் காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறுமடிகளாலும் நம் பண்டைத் தமிழ்நாட்டின் பலவகைக் கைத்தொழில்கள், விவசாயம், வாணிகம், சிற்பத்தொழில்கள் முதலியவற்றின் சிறப்புக்களும், செல்வம் நாகரிகம் இவற்றின் மேம்பாடுகளும் தெற்றென விளங்குகின்றன.

[இத்தகைய கைத்தொழில்களிலும் விவசாயத்திலும் செல்வத்திலும் நாகரிகமுதலியவற்றிலுஞ் சிறப்புற்றிருந்த நஞ் செந்தமிழ்நாடு இற்றைஞான்றடைந்திருக்கும் நிலைதா னென்னே: எல்லாவற்றிற்கும் (அதாவது உணவுப்பொருள் ஆடை முதலிய யாவற்றிற்கும்) பிறநாடுகளை எதிர்நோக்கியிருக்கின்றது. இதைக் காலத்தின் கோலமென்றுதான் கூறவேண்டும். வே றென்னவிளம்புவது? தெய்வத்திருவருள் முன்னிற்பதாகுக.]

இன்னும், இன்ன இன்ன நாட்டில் இன்ன இன்ன தொழிலிற் சிறந்தாரிருந்தார் என்பதையும் அறியலாம். இந்நூலில்,

"மகத வினைஞரும் மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்."

எனக் கூறுமடிகளான் மகதநாட்டி லிரத்தினவேலையிற்சிறந்தா ரிருந்தார், மகாராஷ்டிரதேசத்திற் கம்மத்தொழிலிற்சிறந்தா ரிருந்தார்; அவந்திதேசத்திற் கொல்லுத்தொழிலிற்சிறந்தா ரிருந்தார்; யவனதேசத்திற் றச்சுத்தொழிலிற்சிறந்தா ரிருந்தார் என்று தெரிகிறது. ஒண்டமிழ்ப் புலவீர்! இன்னு மிம் மணிமேகலையாற் குறித்துணரப்படும் விஷயங்கள் பலவிருப்பினும் விரிவஞ்சி இம்மட்டோடு நிறுத்துகின்றேன்.

இங்ஙனம்,

வை. சுப்பிரமணியன்,
மாணவன்,
தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

---

15

உ

# திருப்புறம்பயத்துக் கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும் கண்ட சில செய்திகள்.

---

வை. சுந்தரேச வாண்டையார், ஆசிரியர், திருவையாறு.

திருப்புறம்பயம் என்பது சோழநாட்டுத் தேவாரம்பெற்றதலங்களில் ஒன்றாகும். இது கும்பகோணத்திற்கு வடமேற்கில் ஐந்துமைல் தூரத்தில் மண்ணியாற்றின் வடகரையில் இருக்கிறது. இது சைவசமயகுரவர்கள் நால்வர்களாலும் பாடப்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்தது.

இவ்வூர், முதல் இராசராசன்காலத்திற் சோழமண்டலத்தில் அண்டாட்டுக்கூற்றத்துட்பட்டிருந்தது என்று கல்வெட்டாற் புலப்படுகிறது. இதற்குப் பராந்தகச்சோழ சதுர்வேதிமங்கலம் என்று ஒரு பெயரும் உண்டு. விக்கிரமசோழன்காலமுதற் பிற்காலத்துச் சோழர்கள்காலம் வரை அப்பெயர் மாறி விக்கிரமசோழவளநாட்டு இன்னம்பர்நாட்டுத் திருப்புறம்பயம் என்று வழங்கிவந்திருக்கிறது.

இது பிற்காலத்துச் சோழர்களில் முதல்வனும் கி. பி 880 முதல் 907வரை அரசாண்டவனுமான முதல் ஆதித்தனால் எடுப்பிக்கப்பட்ட மிகப்பழைய கற்றளியையுடையது. இவ்வாலயத்திற்கு ஆதித்தேச்சுரம் என்ற பெயர் உண்டென்று சில கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. எனவே இவ்வாலயம் கி. பி. 907க்கு முன்னரே கட்டப்பட்டுள்ளது என்பது வெளிப்படை.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகிய சைவசமயகுரவர்களாற் பாடப்பட்டுள்ளமையின் கி. பி. ஏழாம்நூற்றாண்டிலும் இங்கு ஆலயம் பெருமையுடன் விளங்கியிருத்தல்வேண்டும்.

இவ்வூர்ப்புராணத்தில் இவ்வாலயத் தெழுந்தருளியுள்ள சிவபெருமான், ஒரு வணிகப்பெண்மணியின் திருமணங்குறித்துச் சான்று பகர்ந்தார் என ஒரு வரலாறு காணப்படுகின்றது.

சிலப்பதிகாரத்து வஞ்சினமாலையுட் காணப்படும் "வன்னி மரமு மடைப்பளியுஞ் சான்றாக, முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள்" என்ற தொடரும் மேற்கூறிய வரலாற்றையே குறிக்கின்றது. சிலப்பதிகாரத்திற் கூறப்பட்ட இவ்வரலாறு அந்நூல் தோன்றியகாலமாகிய கி. பி. முதல் நூற்றாண்டிற்குமுன்னரே நிகழ்ந்து தமிழ்நாடெங்கும் பரவியதாதல்வேண்டும். ஆகவே இத்திருப்புறம்பயத்திலுள்ள ஆலயம் இற்றைக்கு இரண்டாயிரஆண்டுகட்குமுற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்ததென்பது புலனாம்.

இவ்வாலயம் முதல் ஆதித்தன்காலமுதல் இராசராசன், கங்கைகொண்டசோழன், முதற்குலோத்துங்கசோழன், இரண்டாங்குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், மூன்றாங்குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன் முதலான சோழமன்னர்களுடைய கல்வெட்டுக்களைத் தன்னகத்துக்கொண்டுள்ளது. இதில் விசயநகரவேந்தனது கல்வெட்டு ஒன்றும் உண்டு.

இவ்வாலயத்திற் சற்றேறக்குறைய நூறுகல்வெட்டுக்கள் உள்ளன. இவைகளெல்லாம் அக்காலத் தமிழ்வேந்தர்களாகிய சோழர்களும் அவர்களது அமைச்சர்களும் படைத்தலைவர்களும் பிறரும் புறம்பயத்தெம்பெருமானுக்கு நித்திய நைமித்தியங்களுக்கும் திருநந்தாவிளக்குகளுக்கும் நிபந்தங்கள்விடுத்ததையும் பல அணிகலன்கள் கொடுத்ததையும் விளக்குகின்றன.

இவற்றையெல்லாம் ஆராய்ந்துபார்க்கின் தமிழகத்தின்வரலாற்றை முறையாக ஆராய்ந்தறியவிரும்பும் வரலாற்று ஆராய்ச்சியாளர்க்கு எத்துணையோ அரிய செய்திகள் எளிதிற்கிடைக்குமென்பது திண்ணம். இத்தலத்தைப்பற்றிச் சில செப்பேடுகளும் உள்ளன. இச்செப்பேடுகளாலும் கல்வெட்டுக்களாலும் அறியக்கிடக்கும் சில உயரிய செய்திகளை அடியிற் குறிப்பேம்.

திருவாலங்காட்டுச்செப்பேட்டினாலும், உதயேந்திரச்செப்பேட்டினாலும், திருப்புறம்பயத்தில் ஒரு பெரும்போர்நிகழ்ந்தசெய்தி வெளியாகின்றது. சோழமன்னனாகிய முதலாம் ஆதித்தன், பாண்டியன் இரண்டாம் வரகுணன், சேரன் ஸ்தாணுரவி ஆகிய மூவரும் பல்லவ வேந்தனாகிய அபராஜித விக்கிரமவர்ம்மனையும் அவனுக்குத்துணையாகப்போந்த கங்க அரசனாகிய இரண்டாம் பிருதிவிபதியையும் திருப்புறம்பயப் போரில் வென்று புறங்காட்டியோடச்செய்தனர். இரண்டாம் பிருதிவிபதி இப்போரிற் கொல்லப்பட்டான்.



இப்போரின்பயனாக முதலாம் ஆதித்தன் சோழமண்டலத்திற்கு அரசனானான். கி. பி. எண்ணூற்றெண்பதையொட்டி இப்போர் நிகழ்ந்திருக்கவேண்டும். இந்துதேசசரித்திரநிகழ்ச்சியில் பிளாசியுத்தம் எத்துணைச் சிறப்புடையதாகக் காணப்படுகின்றதோ அத்துணைச் சிறப்புடையது இப்புறம்பயப்போரென்பது நன்கு அறியத்தக்கதொன்றாம்.

உதிரம்படிந்த தோப்பும் பிருதிவிபதியின் நடுகல் அமைந்ததோர் சிறு கோயிலும் புறம்பயப்போரைத் தற்காலத்தார் நினைவுகூர்தற்கு ஏற்ற சின்னங்களாக இன்றும் நிலைபெற்றுள்ளன. எனவே தமிழக வரலாற்றிற் குறிக்கத்தக்க பெருமையமைந்தது இவ்வூரென்பது ஈண்டு அறியத்தக்கதொன்றாம்.

இனி இவ்வாலயத்திலுள்ள மூன்றாங் குலோத்துங்கனது கல்வெட்டு ஒன்று முத்துமுளைக்கன்று, அறம்பயந்த விநாயகர் என்று இருவிநாயகர்களைக் குறிப்பிடுகிறது. இவர்கள் பள்ளியறைநாச்சியாருக்கு எதிரிலிருப்பவரும், சந்நிதிக்கு எதிரிற் கீழவீதியில் இருப்பவருமாகிய இரு விநாயகர்களாக இருத்தல்வேண்டும். இவ் விருவிநாயகர்களில் இவருக்குரித்து இப்பெயரென்று இதுபொழுது திட்டமாகக் கூறுதற்கில்லை. இவ்வேந்தனது மற்றொருகல்வெட்டு இவ்வூரில் ஆண்டார் கடியாபரணர்மடம் என்று ஒரு மடம் இருந்ததைக் குறிப்பிடுகிறது,

இனி, மூன்றாம் இராசராசன்காலத்தில் வீதிவிடங்கவிழுப்பரையன் அவனுடைய உடன்பிறந்தான் அகிலநாயகவிழுப்பரையன் என்ற இருவரும் இச்சிவாலயத்தில் திருவலஞ்சுழியுடையார், புற்றிடங்கொண்டார் என்ற இருவர் படிமங்களை எழுந்தருளுவித்து நிபந்தங்களை விட்டிருந்ததாகத் தெரிகிறது.

இஃதேபோன்று திரிபுவனதேவர்க்கு யாண்டு 35-இல் வெணூர்க்கிழவன் ஆழ்வான் திருப்புறம்பயமுடையனான செம்பியன் பல்லவரையன், குடந்தைக் கீழ்க்கோட்டமுடையார்கோயில் முதற்பிராகாரத்

துக்கிழைத்திருமாளிகையில் திருப்புறம்பயமுடையார்படிமத்தை எழுந்தருளுவித்துப் பூசைக்கும் அமுதுபடிக்கும் நிபந்தங்கள் விட்டிருக்கிறான். இச்செய்தி திருவாளர். தி. வை. சதாசிவ பண்டாரத்தார் அவர்களால் வெளியிடப்பட்ட நாகேச்சுராது திருக்கோயிலிலுள்ள *கல்வெட்டுக்களாற் புலனாகிறது.

இதனால், ஒருவர் தமக்குப் பற்றுள்ள வேற்றூரிலுள்ள இறைவனைத் தமதூர்ச் சிவாலயத்தில் எழுந்தருளுவித்து வழிபாடாற்றும் வழக்கம் உண்டென்று தெரிகிறது.

இனி மேற்குறித்த விதிவிடங்க விழுப்பரையனும் அவனது உடன்பிறந்தாளும் மூன்றாம் பிராகாரத்தில் அறம் உரைத்தநாயனாரை எழுந்தருளுவித்த செய்தியும் இம்மூன்றும் இராசராசனது மற்றொரு கல்வெட்டாற் புலனாகிறது.

எனவே இச்சிவாலயத்திற்கு மூன்றாம் இராசராசன்காலத்தில் மூன்று பிராகாரங்கள் இருந்திருத்தல்வேண்டும். இதுபொழுது இரண்டு பிராகாரங்களே உள்ளன. இம்மூன்றாம்பிராகாரம் எப்பொழுது அழிவுற்றது என்பது புலனாகவில்லை.

இவைகளே இப்புறம்பயத்தைப்பற்றி யாம் ஆராய்ந்த சில செப்பேடுகளிலும், கல்வெட்டுக்களிலும் காணப்பட்ட உயரிய செய்திகளாகும்.

மற்றொருமுறை ஏனைய கல்வெட்டுக்களையும் ஆராய்ந்து அவற்றிற் காணப்படும் செய்திகளையும் குறிப்பிடுவாம்.

*தமிழ்ப்பொழில், துணர் 6, மலர் 6, 7, 8.

உ

# யவனமஞ்சரி.

## அரிஸ்தாதில் எழுதிய ஒழுக்கநூல்.

[கஉஅ-ம் பக்கத் தொடர்ச்சி.]

### ஆறும்பாகம். பகுத்தறிவுத்தத்துவத்தின் மேன்மைகள்.

#### 1-ம் அதிகாரம். புத்தி.

மிகுதலும் குறைதலுமின்றிச் சமன் அறிந்து தெரியும் ஆற்றல் புத்தி என வரைந்தாம். ஒவ்வொரு அறத்திற்கும் ஒவ்வொரு நோக்கம் வேண்டப்படின், அவற்றின் தன்மை தீர்மானிக்கப்படவேண்டும். சுத்தபுத்தியின்வழிநின்று எவ்வகை ஒழுக்கத்தையும் வரையறுத்து இது நன்மை இது தீமையென அளவைசெய்யலாமென வாளாகூறுவதிற் பயனில்லை. புத்தி என்பது என்ன? அதை எவ்வாறு மனம் அதிட்டிக்கின்றது? மனத்தின் இயல்பை இருவகைப்படுத்தினாம். (1) ஒன்று மெய்ப்பாட்டை அளவுநோக்கி அடக்கும் ஆற்றல். இவ்வசுத்தபுத்தி நல்லொழுக்கப் பயிற்சிக்கு உதவுகின்றது. (2) மற்றது சுத்தபுத்தி. ஈண்டுச் சுத்தபுத்தியின் தன்மையை ஆராய்வாம். சுத்தபுத்தி இருவிதமாய்த் தொழிற்படும். முதலாவது மாற்றமடையாத நித்தமான பிரமாணங்களை ஆராய்ந்து இயற்கையுணர்வாய் அறியும் பகுதி. இரண்டாவது மாறுதலடைவனவற்றை அறியும் பகுதி. ஒவ்வோர் இனத்தத்துவங்களும் அவ்வவற்றின் இனமான பொருள்களையே விடயிப்பதால், முந்தியதை ஆராய்ச்சி என்னும் சால்நிரதத்துவம் எனவும் பிந்தியதைத் தெரிவுதத்துவமெனவும் பெயரிடுவாம். இவற்றின் மேன்மைகளை ஆராய்வோம்.

#### 2-ம் அதிகாரம். புத்தியின் தொழில்.

உண்மையை அறிவதே புத்திதத்துவத்தின் தொழில். மனம் உண்மையை அறியும்போதும் ஒருசெயலை நிச்சயிக்கும்போதும் தொழிற்படும் தத்துவங்கள் மூன்று. அவை இந்திரியம் புத்தி இச்சை (ஆசை). [ஈண்டு இந்திரியம் என்றது ஏற்றலும் இடுதலும் செய்வதாகிய கன்மேந்திரியத்தையொழித் தொழிற்க ஞானேந்திரியத்தை]. ஞானேந்திரியமாகிய ஐம்புலன்களுக்கு நிச்சயிக்குந்தன்மை இன்மையால், அவை தொழிலைத்தொடக்கமாட்டா. புத்தி என்னும் கருதல் இருவகைத்து. அவை உடன்பாடும் எதிர்மறையும். ஆசை, தவிர்த்தலும் தேடுதலும் என இருவகைத்து. தெரிவுசெய்யப்பட்டனவாய்ப் பயிற்சிப்பட்ட சத்தியின்செயல்கள் நல்லொழுக்கமென்றோம். ஆலோசிக்கப்பட்ட ஆசையே

தெரிவு. நாம் தெரிவுசெய்யப்பட்டதையே தேடவேண்டும். ஆலோசிக்கப்பட்டுத் தெரிவுசெய்யப்பட்டுத் தேடப்படும்வழியே செயல் தோன்றும். ஆனால், செயல்களையும், ஆக்கப்பட்டபொருள்களையும் ஆராயாத தத்துவ ஞான ஆராய்ச்சியின் உண்மைகளை நல்லவென்றும் பிழையானவற்றைத் தீயனவென்றும் சொல்வோம். உண்மையறிவது புத்தியின்தொழில். ஆசையின் உண்மையை அறிவது அநுபவபுத்தி. ஒரு செயலின் நோக்கம் ஆசையினின்றும் தோன்றும். நோக்கந் தோன்றுவதற்கு வேண்டியன புத்தியும் ஆசையும். நோக்கமில்லாவிடின் புத்தி தனியே ஒரு தொழிலைச் செய்யமாட்டாது. ஒருதொழிலைச் செய்யும் புத்தி ஒரு நோக்கத்திற்குத் துணைக்கருவியாகி அத்தொழிலைச் செய்யும். இங்ஙனம் நோக்கம் என்பது ஆசையால் விழையும் புத்தி என்றும், ஆராய்தல் செய்யும் ஆசை என்றும் வரையப்படும் இப்பகுத்தறிவின்மேன்மையே மக்களை விலங்குச்சாதியினின்றும் வேறுக்கிக்காட்டுவது. இறந்த காலத்துச்செயலை ஒருவராலும் நோக்க இயலாது. எதிர்காலத்து விளைவனவற்றைப்பற்றியே தெரிவுசெய்யப்படும். சர்வவல்லமையுடைய கடவுளாலும் செய்தசெயலைச் செயலில்லாமல் அழிக்கமுடியாது.

### 3-ம் அதிகாரம். ஆராய்ச்சி. (Science.)

மனம் எதிர்மறையானும் உடன்பாட்டானும் உண்மைகளையறியும் முறை ஐவகைத்து. அவை கலைப்பயிற்சி (Art), ஆராய்ச்சி, விவேகம் (Prudence), ஞானம், புத்தி. அபிப்பிராயத்தையும் ஆறாம்வகையாக்குவது தவறு. ஆராய்ச்சியின் இலக்கணமென்ன? ஆராய்ச்சியறிவால் பெறப்படும் பிரமாணங்கள் நித்தமானவை எனினும் ஆராய்ச்சிநூல்கள் ஆராயும் பொருள்கள் மாறுதலடைவன. ஆராய்ச்சிநூல்களின் பொருள்கள் இல்பொருளோ உள்பொருளோ எனச் சொல்லொணாதன. ஆராய்ச்சியால் அறியப்படுவன கற்கப்படுவனவும் கற்பிக்கப்படுவனவும். அறியப்பட்டபொருள்களின் மூலமாக அநுமானத்தாலும் வேதநுமானத்தானும் ஒரு புதிய உண்மையைக் கற்பிக்கிறோம். வேதநுமானத்தால் பொதுப் பிரமாணங்களைப் பெறுகிறோம். கருதலநுமானத்தால் சிறப்புத்தாட்டாந்தங்களை அடைகிறோம். இவ்விருவகை அநுமானங்களும் ஒன்று ஒன்றின் உதவிவேண்டிநிற்கும். எடுத்துக்காட்டு என்னும் பூர்வசாதனம் வேதநுமானத்தால் அறியப்படும். சிறப்புத்தாட்டாந்தங்களின் உண்மையைத் திரட்டிச்சொல்வதே வேதநுமானத்தின் தொழில். ஆராய்ச்சியென்பது நிரூபிப்பதிற் பயிற்சிப்பட்ட சத்தி. ஒவ்வொரு ஆராய்ச்சியின் ஆதாரங்களும் அவ் ஆராய்ச்சியாற்பிறக்கும் அநு



மானப்பிரமாணங்களிலும் பிரதானமானவை. இவ்வாறு காரணகாரியத் தொடர்புநோக்கி முறைவகுக்கப்பட்ட அறிவே ஆராய்ச்சி.

### 4-ம் அதிகாரம். கலைப்பயிற்சி.

மாறுதலடைவனவாகிய சம்யோகசம்பந்தமுடையன தொழில்களும் ஆக்கப்பொருள்களும். ஆராய்தலிற் பயிற்சிப்பட்ட சத்தியும் ஆக்கப்பொருள்களை உண்டாக்கும் சத்தியும் வெவ்வேறு. நிதானமாகப் பொருளை உண்டாக்கும் பயிற்சிப்பட்ட சத்தி கலைப்பயிற்சி. ஒவ்வொரு கலைப்பயிற்சியானும் ஒவ்வொருவகைப்பொருளை உண்டாக்குவேம். ஆக்கப்பொருளை உண்டாக்குபவன் இயற்றுதற்கருத்தா; உண்டாக்குவிப்பவன் நிமித்தகாரணன்; கலைப்பயிற்சி துணைக்காரணம். இனிச் செயலும் ஆக்கப்பொருளும் வேறு. மாறுதலடையும் ஆக்கப்பொருள்கள் தோன்றிநின்றழியுந் தன்மையனவாகையால் அப்பொருள்களை உண்டாக்குவதில் நுட்பம் பயிற்சியாற்றான் அடையப்படும்.

### 5-ம் அதிகாரம். விவேகம்.

விவேகத்தை ஆராய்வதும் விவேகியின் தன்மையை ஆராய்வதும் ஒன்றே. தேகசுகம் கருதுவோன் தனக்கு எது நல்லது எது தீயது என விவேகத்தால் அறிவன். வழிவகைகளைத் தேடுவதில் விவேகமுடையவனைப் புத்திசாலியென்பேம். புத்திசாலி தனது ஆற்றலுக் கெட்டியவற்றையே தேடுவான். ஆராய்ச்சியின் முக்கியப்பண்பு நிரூபிக்குந்தன்மை. தோற்ற நாச முடையனவற்றின் தொடர்பை விளக்கும் பிரமாணங்கள் நித்தமாகிய இயற்கைப்பிரமாணங்களாயினும், இயற்கை ஆராய்ச்சிப்பொருள்கள் தோற்ற நாச முடையனவாய் மாறுதலடைகின்றமையால் அப்பொருட்குணங்களை ஆராய்ச்சிநூலார் நிரூபியாமல், இவை இத்தன்மைய பொருள்கள் என விரித்துரைப்பார். இயற்கையாராய்ச்சிகளாகிய பௌதிகநூல், பயிர்நூல் விலங்கியல்நூல் முதலியவற்றைக் கற்று இவ்வுண்மையைக் கடைப்பிடிக்க. நீக்கமின்றிநிற்கும் பொருள்கள் நித்தமாய் ஓரேமாதிரியாய்நின்று மாறுதலடையாமல் நிலைப்பதால், அப்பொருள்களைப்பற்றி ஆலோசியாமல் உடனே நிரூபித்துக்காட்டுவோம். இவற்றிற்குதாரணம் பலவகைக் கணிதநூல்களும் திறனாயும்நூல்களும் (அளவைநூல் தத்துவநூல் ஒழுக்கநூல் அழகியல்நூல் முதலியன திறனாயும்நூல்கள்).

இதுநிற்க. விவேகம் நூலாராயும் ஆற்றல் அன்று; விவேகம் பொருளை ஆக்கும் பயிற்சியும் அன்று; அது உண்மையை ஆலோசித்தறியும் ஒருசத்தி. ஒருவன் தனக்கு எது நல்லது எது தீயது எனத் தீர்

மாளிக்கவல்லவனுயின், அவனை விவேகி என்பேம். பெரிக்கிள்ஸ் என்பவரும் அவர்போன்றோரும் புத்திசாலிகள். ஆராய்ச்சிநூல்களை ஆராயும்போது விவேகத்தை நாம் உபயோகியோமாயினும் ஒழுக்கங்களை நிச்சயிக்கும்போது விவேகம் பெரிதும் பயன்படும். இன்ப துன்பம் விளைக்கும் புறநன்மைகளை ஆராயும்போது விவேகபுத்தியை உபயோகிப்போம். இல்வாழ்க்கையில் நன்னோக்கத்தை ஆராய்ந்தறிந்து கடைப்பிடிக்கும் சத்தி விவேகம். கலைஞானப்பயிற்சிசெய்வோருள் கலைஞானத்தின் பெருக்கத்துக்காகக் கலைஞானம்பயில்வாரைக் காண்டலரிது. ஒரு பொருளை உண்டாக்குவது உண்டாக்குவோனது நன்மைக்காகவே; அப்பொருளின் நன்மைக்கன்று. சடப்பொருள் நன்மையை அறியமாட்டாது. விவேகத்தை உபயோகிப்பதில் நோக்கமும் பயிற்சியும் ஒன்று.

### 6-ம் அதிகாரம். யோகக்காட்சி. (Intuition).

யோகக்காட்சியின் வழியதாகிய அநுபவஅறிவு நிரூபிக்கப்படும் அறிவிற்கு ஆதாரம். ஆராய்ச்சி சாமானிய தாட்டாந்தங்களால் உண்மைகளைக் கூறுகின்றது. இவ்வாறு சமவாயம் என்னும் காரணகாரியத் தொடர்புகளை நிரூபிப்பதற்கு மூலாதாரங்கள் அவசியம் வேண்டப்படும். ஒரு ஆராய்ச்சிக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்ட பிரமாணங்கள் அவ்வாராய்ச்சியால் நிலைநிறுத்தப்படுவனவல்ல, கலைப்பயிற்சியாலுமல்ல, ஞானத்தாலுமல்ல, விவேகத்தாலுமல்ல. காரணகாரியசம்பந்தத்தாற் கட்டுப்பட்ட பொருள்களின் உண்மைகளை மாறுதலடையாத நினைவுலகிலேனும் அல்லது மாறுதலடையும் நிலவுலகிலேனும் உண்மைகளாக அறியும் ஆன்மதத்துவங்கள் நான்குண்டு. அவை ஆராய்ச்சி, விவேகம் ஞானம், புத்தி (கலைப்பயிற்சிநண்டு பொச்சாப்புக் காரணமாக விடப்பட்டதன்று; அது விவேகத்தில் அடங்கும்). ஆராய்ச்சிநூல்களின்மூலாதாரங்களை ஞானம், விவேகம், ஆராய்ச்சி என்பனவற்றால் நிரூபித்து விளக்க முடியாதாயின், யோகக்காட்சி யெனப்படும் ஒருவகைநுட்பபுத்தியால் நிச்சயித்துப் பிறர்க்கு நிரூபித்துக்காட்டுவோம். யோகக்காட்சியால் நிச்சயிப்பேம் என்பது ஒழிபு என்னும் பாரிசேடவளவையாற் பெறப்பட்டது. [யோகக்காட்சி காலம் இடம் முதலியவற்றாற் கட்டுப்பட்ட அநுபவத்திற்கும் சாதாரண புத்திதத்துவத்திற்கும் மேலான ஓர் நுட்பபுத்தி].

### 7-ம் அதிகாரம். ஞானம்.

அநுபவமும் ஆராய்ச்சியறிவும் ஒருங்குசேர்ந்திருப்பதே ஞானம். உலகவழக்கிற் கலைப்பயிற்சியில் திறனடைந்தோரை ஞானிகளென்போம்.



அன்றியும், கலைப்பயிற்சி இல்லாதோரையும் அறிவிற் சிறந்தோராயின் ஞானிகளென்போம். ஞானிகள் அறிவின் ஆதாரங்களையும் அவ்வாதாரங்களின் உண்மைநலத்தையும் அறிந்தவராவர். ஞானம் என்பது அந்நுவயத்தால் எதையும் நிரூபிக்கும் புத்தியும் யோகக்காட்சியால் விளையும் அநுபவஅறிவும் கலந்து ஒன்றாகி ஒரு சத்தியாய்ப் பிரகாசித்தலே.

மனிதனுக்கு நன்மையாயிருக்கும்பொருள் மீனுக்குத் தீங்காயிருக்கலாம். ஆனால் ஒருகோடு ஒருவனுக்கு நேராயின் எவருக்கும் அது நேரானகோடே. விவேகம் பலரும் பலவாறாக உபயோகிக்குந் தத்துவம். ஞானம் ஒன்றே ஒன்று. ஞானத்தால் ஒருவன் ஒன்றை நன்மை என்றால் அதை எல்லாரும் நன்மை எனறே ஒத்துக்கொள்வர். ஞானம் புறநன்மைகளை ஆராயாமல் சாமானிய தாட்டாந்தங்களின் மூலமாக நித்தப்பொருளாகிய பரமநன்மையை ஆராய்வது. சிற்சில மனிதரின் நன்மையை ஆராயாமல் பொதுநன்மையை ஆராய்ந்தமையால், அனச்சக்கோரஸ், தேல்ஸ் முதலியோரை ஞானிகள் என்பர்.

விவேகம் ஒவ்வொருவர்க்கும் சிறப்பான இம்மைநன்மையை ஆராய்வது. வாழ்க்கையில் ஒழுக்கமுறைகளை நிச்சயிக்கும்போது விவேகம் நூலறிவினும் பயன்படும். சமிக்கத்தக்க இறை நொய்ம்மையாயிருக்க வேண்டும் என்று இயற்கையாராய்ச்சியால் அறிவேம். ஆராய்ச்சி நூல்களைக் கற்று எப்பொருள்கள் நொய்ம்மையானவை என அறிய இயலாது. விவேகபுத்தியாற் கோழிக்குஞ்சின் இறைச்சி நொய்ம்மையானதென அநுபவத்தில் அறிவோம். விவேகத்திற்கும் ஞானத்திற்கும் வேற்றுமை உணர்த்தினும்.

### 8-ம் அதிகாரம். விவேகத்தினது தன்மை.

அமைச்சர்க்கு விவேகம் இன்றியமையாதது. தத்தம் முயற்சிகளிலும் செயல்களிலும் ஒவ்வொருவரும் விவேகியாயிருத்தல் நன்று. இளைஞன் கணிதத்தில் வல்லுநனுயினும் அநுபவமின்மையால் விவேகியாகான். விவேகம் வயதேறவளர்வது. விவேகி தன்கருமத்தை ஊக்கமாய்ச்செய்வான்; எவற்றையும் காண்டலானும் கருதலானும் நிச்சயிப்பான்; குடும்பத்தையும் ஒழுங்காக நடத்துவான்; அரசியல்விஷயங்களிலும் ஆலோசனைசெய்து சித்தியடைவான். யூரிப்பிடிஸ் என்பவரின் நாடகத்தில் அமைச்சர் பலவிஷயங்களையும் ஆராயும் போதையுடையோர் எனக் கூறப்பட்டுளது. விவேகி தன்செயலில் கருமமேகண்ணாயிருப்பன். இளைஞர் கணிதவல்லுநராயினும் அநுபவமில்லாமையால் விவேகிகளாவது அருமை. யோகக்காட்சியானுய அறிவு விவேகத்தினும்

வேறு. யோகக்காட்சியால் நிரூபித்துக்காட்ட இயலாத சனசமூக வாழ்க்கையொழுங்குகளை விவேகம் ஆராய்ந்தறியும்.

## 9-ம் அதிகாரம். ஆலோசனை.

ஆலோசித்தலும் ஆராய்ச்சியும் ஒன்றன்று. நல்லாலோசனை என்பது என்ன? அபிப்பிராயமோ? அன்றேல் ஆராய்ச்சியோ? அன்றேல் உய்த்துணர்வோ? அன்றேல் ஐயமோ? அறிந்தபொருளைப்பற்றி ஆலோசிப்பதால் அது ஆராய்ச்சியன்று; ஐயமும் அன்று; அபிப்பிராயமுமன்று. அபிப்பிராயமென்பது எல்லாராலும் சிந்திக்கப்படும் ஒருபொருளில் தனது எண்ணத்தைச் சொல்வதே. அறிந்தவற்றை ஆறுதலாகச் சிந்திப்பதே ஆலோசித்தல். ஆலோசித்தல் ஒருவகை யூகம். ஆலோசித்தல் என்பது சரியாகச் சிந்தித்தலும் அநுமித்தலும். ஒரு சாத்தியப்பொருள் உண்மையாயினும் அதைப் பெற்ற முறை பிழையாகஇருக்கலாம். பிரதிக்ஞை சரியாயினும் ஏது பிழையாகலாம். தீர்மானம் சரியாயினும் அதன்முறை பிழையானால் அதை நல்லாலோசனை என மொழியோம். நல்லஆலோசனை என்பது முறைபிறழாது சரியான வழிவகைகளை ஒரு நோக்கத்திற்குத் தேடுவதாம். விவேகி எந்நோக்கத்திற்கு எம்முறை சரியெனத் தெரிவுசெய்வன்.

## 10-ம் அதிகாரம். புத்தி.

புத்தி ஆராய்ச்சியன்று; அபிப்பிராயமன்று; நித்தப்பொருள்களை ஆராயும் தத்துவமன்று; ஆசங்கையை நீக்கிச் சங்கற்பவிகற்பஞ்செய்வது புத்தி. [குற்றியோ மகனோ என ஐயம்நிகழின் புத்தி தொழிற்பட்டு இது குற்றியன்று மகனென நிச்சயிக்கும். மனம் புத்தியை அதிட்டித்து நிருவிகற்பக்காட்சியைப் பெயர் சாதி குணம் முதலியவற்றால் உணர்ந்து சவிகற்பக்காட்சியாக்கும்.] புத்தியின் விடயங்களும் விவேகத்தின் விடயங்களும் ஒருவகையாயினும் புத்தி விவேகமன்று. விவேகம் ஒழுக்கத்திற்போல இதைச் செய்யலாம், இதைச் செய்யக்கூடாதென வற்புறுத்தும். புத்தி ஒருபொருள் எத்தன்மைத்தென மானதக்காட்சியான் நிச்சயிக்கும் சத்தி. மேலும் ஆராய்ச்சிநூல்களைக் கற்போன் தன்குருவினிடத்துக் கற்ற கல்வியை உபயோகிப்பதற்கும் நன்குவிளங்குவதற்கும் புத்தி இன்றியமையாதது.

## 11-ம் அதிகாரம். யூகம்.

ஊகித்தல் என்பது தற்செயலாய் ஒருண்மையை அறிதலன்று. உண்மையை ஆலோசித்து நிச்சயிப்பதே யூகம். நல்லவன் யூகமுடையனாயின் பிறரின் நன்மையையுங்கருதி ஒப்புரவுடையனாயும் இருப்பன். யூகம், விவேகம், புத்தி முதலியன எல்லாம் ஒருவனிடத்து அமைந்திருப்பது இயல்பு. இவை முடிபான உண்மைகளை ஆராய்கின்றன. அனுபவபுத்தி ஒழுக்கப்பிரமாணங்களின் ஆதாரங்களை நிச்சயிக்கின்றது. அனுபவபுத்தியால் ஆராயவியலாத புத்திதத்துவத்திற்கு அப்பாற்பட்ட முதல்ஆதாரங்களை நிச்சயித்து விளக்குவது யோகக்காட்சி. இனிப் புத்திதத்துவத்தின் இலக்கணம் யூகித்தறிதல். யூகித்தலின் பயனால் மானதக்காட்சி எய்துவேம். சிந்தனைக்காட்சியாற் சாமானிய தாட்டாந்தங்களை உண்டாக்குவதற்குச் சிறப்புத்தாட்டாந்தங்கள் வேண்டப்படும். இச் சிறப்புத்தாட்டாந்தம் எனப்படும் விசேடதாட்டாந்தத்தைக் காண்டலாலும் கருதலாலும் அறிவேம். கருதலாலும் அறியப்படாதவை யோகக்காட்சியான் அறியப்படும். பிறக்கும்போது ஒருவன் ஞானியாகப்பிறப்பதில்லை. யூகத்தாலும், புத்தியாலும், பகுத்தறிவாலும் ஒருவன் ஞானநிலை அடைகிறான். ஆனதுபற்றியே யோகக்காட்சிநிலைக்குக் காரணானுமானத்தில் தேர்ச்சியும் வயதும் அநுபவமும் அவசியமென்போம். வயது ஏற யூகமும் நுட்பமாக வளரும். முடிபான உண்மையை அறிந்தபின் அதைநிலைநிறுத்துவாம். ஆகையால் அனுபவமுடையாரது உரைகளைக் கவனிக்கவேண்டும். யூகத்தைப் பயிற்சிபண்ணி அனுபவத்தைப்பெருக்குதல் நன்று.



## 12-ம் அதிகாரம். சந்தோஷமும் பகுத்தறிவுத்தத்துவங்களும்.

ஒருவன் இன்பவாழ்க்கைநடத்துதற்கு இப்பகுத்தறிவுத்தத்துவங்களால் பயனென்ன என ஒரு ஆசங்கை எழும். விவேகம் ஒருவாறு இன்பத்தின் காரணங்களை ஆராயுமெனின் இது பிழை, இது சரியென அறிவதனால் என்ன பயன்? நல்லொழுக்கம் ஒரு பயிற்சியாயின் விவேகத்தால் என்ன பயன்? வைத்தியநூலைக்கற்றவுடன் ஒருவன் தேகசுகம் அடைகிறானல்லன். விவேகம் ஞானத்தை வரையறுத்துச் சந்தோஷசீவியத்திற்குப் பயன்படுமென்பது நூதனமாய்த் தோன்றும். விவேகமும், ஞானமும், பயனிலவாயினும், ஆன்மதத்துவங்களின் மேன்மைகள்; ஆகையால் வேண்டப்படுவன. மேலும் அவை பயன் தருவன. ஞானம் நல்லறத்தின்பகுதியாய் இன்பத்தை விளைக்கின்றது. விவேகியாய் நல்லொழுக்கநெறி வாழ்தலே இன்பவாழ்க்கை. நல்லொழுக்கம் நன்னோக்கத்தைச் சுட்டிக்காட்டும். இது பிழை, இது சரியென நன்னோக்கத்தைத் தெரிவுசெய்வதற்கு விவேகம் துணையாகும்.

இனி ஆன்மாவின் கன்மசத்தி வேறு; புலன், பகுத்தறிவு, ஆசை முதலியன வேறு. கன்மசத்தி தானே தொழிற்படுதற்கு ஆற்றலில்லாத சடப்பொருள். விவேகம் கன்மசத்தியன்று. அது மனத்தினது சிந்திக்கும் சத்திகளில் ஒன்று.

### 13-ம் அதிகாரம். விவேகமும் நல்லொழுக்கமும்.

விவேகம் நற்செயல் செய்வதற்கு எவ்வாறு உதவுகின்றதென்பதைக் குறிப்பேம். நல்லசெயலென அறியாமல் ஒருசெயலைச் செய்கிறவனை நல்லவன் என்பதில்லை. ஆராய்ந்து தெரிந்து தெளிந்து நற்குணனாய் நன்மைச்செயலைச் செய்வதே நல்லவனது இலக்கணம். நன்னோக்கத்திற்கும் தீயநோக்கத்திற்கும் வழிகளைத் தேடுவதாகிய ஆற்றலின்பெயர் கெட்டித்தனம். நன்னோக்கத்தின் வழிகளை ஆராய்வது விவேகம். இனி நல்லொழுக்கத்திற்கும் இயற்கைநற்குணத்திற்கும் பேதமென்ன? இயற்கையிலே மனிதனுக்கு நற்குணமுண்டென்பதை எல்லாரும் ஒப்பேம். குழவிப்பருவத்திலேயே நீதி, அளவு, வீரம், ஞானம் ஆகிய முழுமுதலறங்களில் ஆன்மா இன்புறுகின்றது. விலங்குகள் பல பெரும்பாலும் இயற்கைநற்குணமுடையன. இயற்கை நற்குணத்தைப் பகுத்தறிவின் தத்துவங்கள் ஒழுங்குபடுத்தாவாயின் நல்லொழுக்கமாகாது. நல்லொழுக்கத்தை ஆராய்வதற்குப்பகுத்தறிவின் தன்மையை ஆராய்வதும் அவசியமென்பதைக் காட்டுவாம். குருடன் பலசாலியாயினும் விழுவதைக் கண்டாமன்றோ! இயற்கை நற்குணத்தை விவேகம் நல்லொழுக்கமாக்குவதால், சிலர் அறத்தை விவேகத்தின் சிறப்புத்தோற்றமென்பர். சோக்கிறேற்றிஸ் என்னும் ஞானியும் இக்கொள்கையுடையவர். நல்லொழுக்கம் விவேகத்தின் சிறப்புத்தோற்றமென்பது பிழையாயினும் ஒருபுடை ஒத்ததெனலாம். விவேகமின்றெனின் அறமின்று என்பது அங்கைநெல்லிக்கனிபோல் விளங்கும். இனி ஒரு அறத்தில் விருப்பமுடையவன் வேறொரு அறத்தை வெறுப்பனாயின், அவனை நல்லவன் எனக் கூறலாகாது. ஒரு அறத்திலே மிகவும் ஆசைப்படுதல் இயற்கை நற்குணம். இயற்கை நற்குணம் அறமன்று. நல்லொழுக்கத்திற் பயிற்சிப்பட்டவன் ஒருஅறத்தை வெறுப்பதும் ஒருஅறத்தை விழைவதும் செய்யான். நல்லவன் எல்லாஅறத்திலும் இன்பம்நிறைவன். விவேகம் அறச்செயலுக்குத் துணையாவதாற் போற்றப்படும். மேலும் விவேகம் ஞானமடைவதற்கும் பெரியதோர் துணைக்கருவி. [தொடரும்.]

க. இராமநாதபிள்ளை, B.A.

27

உ

## ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1932-ம் வருஷம் மார்ச்சு மீ 12௨ நடத்திய ஆங்கிலகலாசாலைத் தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறி யோக்கியதாபத்திரம் பெறும் மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

### பீ.ஏ., பரீக்ஷை.

2-வது வகுப்பு.

| தொடர் எண். | பரீக்ஷை எண். | |
|---|---|---|
| 1 | 25 | A இராமசுவாமி, ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 2 | 24 | K. P. சுப்பிரமணியன், ஷை ஷை |

### எப்.ஏ., பரீக்ஷை.

2-வது வகுப்பு.

| தொடர் எண். | பரீக்ஷை எண். | |
|---|---|---|
| 1 | 75 | S. S. நாராயணன், ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 2 | 57 | R. அய்யாசுவாமி, பிரஸிடென்ஸி காலேஜ், சென்னை. |
| 3 | 86 | M. சுப்பையா, ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 4 | 84 | K. செந்தியப்பன், ஷை ஷை |
| 5 | 80 | A. மணியன், ஷை ஷை |
| 6 | 38 | G சங்கரராமன், மதுரைக்காலேஜ், மதுரை. |
| 7 | 77 | S. இராமஸ்வாமி, ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 8 | 76 | P. ரெங்கஸ்வாமி, ஷை ஷை |
| 9 | 71 | S. பொன்னுசாமி, ஷை ஷை |
| 10 | 83 | P. ஆறுமுகம், ஷை ஷை |
| 11 | 85 | A. சாகுல் கமீது, ஷை ஷை |
| 12 | 50 | K. S. வெங்கட்டரமணன், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 13 | 52 | P. கிருஷ்ணமூர்த்தி, ஷை ஷை |
| 14 | 65 | N. அச்சுதன், கவர்ன்மெண்ட் விக்டோரியா காலேஜ், பாலக்காடு. |

## மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 139 | A. அந்தோணிசாமி, முனிசிபல் காலேஜ், சேலம். |
| 2 | 302 | K. சரவணை, ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 3 | 147(a) | S. V. கந்தசாமிசெட்டி, முனிசிபல் காலேஜ், சேலம். |
| 4 | 181 | S. கந்தசாமி, ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி. |
| 5 | 318 | S. I. இஞ்ஞாசிமுத்து, ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 6 | 185 | R. பழனிவேல், ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி. |
| 7 | 111 | S. A. S. முகம்மது கமால்தீன், போர்டு ஹைஸ்கூல், குளித்தலை. |
| 8 | 140 | M. கந்தசாமி, முனிசிபல் காலேஜ், சேலம். |
| 9 | 304 | G. கிருஷ்ணன், ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 10 | 224 | K. முனிரத்தினம்பிள்ளை, போர்டு ஹைஸ்கூல், காவேரிப்பாக்கம். |
| 11 | 258 | C. V. கோபிநாதன், க்ஷத்திரிய வித்தியாசாலை, விருதுநகர். |
| 12 | 130 | M. மாரிமுத்து செட்டி, முனிசிபல் காலேஜ், சேலம். |
| 13 | 143 | V. சுப்பிரமணியன், ஷை ஷை |
| 14 | 109 | N. பெரியண்ணன், பிஷப்ஹீபர் ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி. |
| 15 | 141 | R. தாமோதரதாஸ், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 16 | 178 | T. R. அமிர்தலிங்கன், போர்டு ஹைஸ்கூல், உரத்தநாடு. |
| 17 | 329 | S. முருகேசன், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 18 | 314 | T P. துரைஸ்வாமி, ஷை ஷை |
| 19 | 144 | V. சுப்பையா, முனிசிபல்காலேஜ், சேலம். |
| 20 | 145 | N. சுப்பராயன், ஷை ஷை |
| 21 | 158 | T. K. கணபதி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 22 | 125 | M- K. ராஜகோபாலன், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 23 | 102 | S. துரைராஜ், க்ஷத்திரியவித்யாசாலை, விருதுநகர். |
| 24 | 240 | C. தேசிகன், ஹிந்துநாடார் விக்டோரியாஹைஸ்கூல், சிவகாசி, |
| 25 | 103 | A. நடராஜன், க்ஷத்திரியவித்தியாசாலை, விருதுநகர். |
| 26 | 126 | B. V. இராமராவ், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 27 | 162 | N. கிருஷ்ணதாஸ், போர்டு ஹைஸ்கூல், அய்யம்பேட்டை. |
| 28 | 301 | P. R. செல்லையப்பன், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 29 | 327 | M. அருள்சாமி, ஷை ஷை |
| 30 | 308 | T. M. ராஜகோபாலன், ஷை ஷை |
| 31 | 309 | M. லாரன்ஸ், ஷை ஷை |
| 32 | 150 | D. ஆறுமுகம், முனிசிபல்ஹைஸ்கூல், கடலூர். |
| 33 | 179 | P. S. நடேசன், போர்டுஹைஸ்கூல், உரத்தநாடு. |
| 34 | 183 | M. அப்பாவு, ஸர். பி. எஸ். சிவஸ்வாமி ஐயர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி. |
| 35 | 148 | V. தண்டபாணி, முனிசிபல்ஹைஸ்கூல், கடலூர். |
| 36 | 149 | V. கோபாலகிருஷ்ணன், ஷை ஷை |
| 37 | 152 | V. திருவேங்கடாசாரி ஷை ஷை |
| 38 | 159 | T. K. மகாதேவராவ், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல். தஞ்சாவூர் |
| 39 | 299 | T. O. S. ஜெபமாலை ரோட்ரிகஸ், ஸெண்ட் ஸேவியர் காலேஜ் பாளையங்கோட்டை. |
| 40 | 290 | S. N. இராமையா, ஹைஸ்கூல், கோபாலசமுத்திரம். |
| 41 | 166 | S. R. நாராயணசாமி, போர்டுஹைஸ்கூல், அய்யம்பேட்டை. |
| 42 | 247 | P. சுந்தரம், ஹிந்துநாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 43 | 313 | U. V. சிலுவை உத்தரியம், ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 44 | 165 | R V. பாலகிருஷ்ணன், போர்டுஹைஸ்கூல், அய்யம்பேட்டை. |
| 45 | 244 | V. மாணிக்கரத்தினம், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல் சிவகாசி. |
| 46 | 300 | V. M. மரியநவமணி. ஸெண்ட்ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 47 | 228 | T. M. வரதராஜன், போர்டு ஹைஸ்கூல், காவேரிப்பாக்கம், |
| 48 | 180 | M. ராமசாமி, ஸர். பி. எஸ். சிவஸ்வாமிஐயர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி, |

| | | |
|---|---|---|
| 49 | 198 | H. கோபாலகிருஷ்ணராவ்காவளே, முனிசிபல்ஹைஸ்கூல், மாயவரம். |
| 50 | 226 | S. R. மார்க்கபந்து, போர்டு ஹைஸ்கூல், காவேரிப்பாக்கம். |
| 51 | 128 | A. S. சுப்பிரமணியன், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 52 | 154 | A. ரெங்கசாமி, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர். |
| 53 | 252 | S. வெங்கடராமன், ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |
| 54 | 316 | S. K. இராமலிங்கம், ஸெயின்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை. |
| 55 | 134 | K. இராஜலிங்கம், முனிசிபல் காலேஜ், சேலம். |
| 56 | 250 | மு. தங்கமுத்து, ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி. |

*M. Dinakara,*
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.
5—7—1932.

---

# தனித்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் பிரஜோத்பத்திஸ்ரீ பங்குனிமீ 26, 27, 28 (1932-ம்ஸ்ரீ ஏப்ரல்மீ 7, 8, 9)-ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப்பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின் அபிதானபத்திரம்.

## பாலபண்டிதபரீக்ஷை.

### 1-வது வகுப்பு.

| தொடர் எண். | சீட்டு எண். | |
|---|---|---|
| 1 | 6 | சி. குமாரசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை. (முதற்பரிசு ரூ. 70 பெறத்தக்க தங்கப்பதக்கம்.) |

## பிரவேச பரீக்ஷை.

### 2-வது வகுப்பு.

| | | |
|---|---|---|
| 1 | 18 | P. இராமநாதன் செட்டியார், care of பண்டித நாராயணசாமியார், மேலமடம், குன்றக்குடி, இராமநாதபுரம்ஜில்லா. |
| 2 | 16 | தேவாரம் M. சுப்பிரமணிய தேசிகர், மாணவர், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி. |
| 3 | 13 | செ. குமாரசாமி, மதுரைத்தமிழ்ச்சங்கக் கலாசாலை, மதுரை. |
| 4 | 46 | R. வீரபத்திரன், care of ராமசாமிசெட்டியார், வணிகவைசியர் வீதி, வடசேரி, நாகர்கோவில். |
| 5 | 19 | S. கூர்மாவதாரன், செல்வநாயகபுரம், முதுகுளத்தூர்ப் போஸ்டு, இராமநாதபுரம் ஜில்லா. |
| 6 | 38 | M. கௌரம்மாள், உபாத்தினி, கவர்ன்மெண்டு பெண்கள் போதனாமுறைப்பாடசாலை, ஈரோடு. |

*M. Dinakara,*
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.
5—7—1932.

# மதிப்புரை.

சோழமன்னர்:—(I, II, III, பாகங்கள்) இவை, புதுக்கோட்டை மஹாராஜாகல்லூரித் தமிழ்ப்பண்டிதர் 'வித்வான்' பண்டித—நா. கனகராஜையரவர்களால் எழுதப்பெற்றவை. [illegible] தான்வரலாறும், [illegible]ண்டாம்பாகம் கிள்ளிவளவன், சோழன் நலங்கிள்ளி: இவர்கள் வரலாறும், மூன்றாம்பாகம் கோப்பெருஞ்சோழன், கோச்செங்கட்சோழன்: இவர்கள் வரலாறுங் கொண்டு விளக்குவன. சங்கநூல்களை நுணுகிஆராய்ந்து யாவரும் விரும்பி வாசிக்குமாறு புனைந்துரையாக விரித்தெழுதப்பட்ட இப்புத்தகங்கள் ஆசிரியருடைய கல்விநலமும் ஊக்கமும், உழைப்பும், உபகாரசிந்தையும், ஆகியவற்றைப் புலப்படுத்துகின்றன. உயர்தர கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் பாடமாகக்கொள்ளற்கு இவை மிகுதியும் தகுதியுடையன. விலை; முதற்பாகம் அணா 10, இரண்டாம்பாகமும் மூன்றாம்பாகமும் தனித்தனி அணா 8. வேண்டுவோர், மதுரை புத்தகவர்த்தகர் இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனாரவர்களிடம் பெறலாம்.

தமிழ்ச்சொற்பிறப்பாராய்ச்சி:— இதனை ஆக்கியோர் நல்லூர் ஸ்ரீ. சுவாமி—ஞானப்பிரகாசரவர்கள் ஆவர். தமிழ்ச்சொற்களெல்லாம்மிகச் சுருங்கின தொகையுள்ள அடிகளினின்று (roots) பிறந்திருக்கின்றனவென்றும், அவை வடமொழி முதலிய வேற்றுமொழிகட்கும் தாதுக்களாய் நிற்கின்றனவென்றும், இதன் ஆசிரியர் தம் மதிவன்மையான் ஆராய்ந்து காட்ட முயன்றுள்ளார். இச்சிறுபுத்தகம் மொழிகளின் தன்மையை ஆராயப்புகுவார்க்கு உறுதுணையாய் உதவவல்லது. இது மிகவும் உபயோகமானதென்று நன்குமதித்துத் திருப்பனந்தாள் மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிநாதஸ்வாமிகளவர்கள் பொருளுதவி புரிந்திருக்கின்றனர். விலை: கலிக்கோ ரூ. 1. அட்டை அணா 12. வேண்டுவோர் இலங்கையில் யாழ்ப்பாணத்துநல்லூர் ஸ்ரீ சுவாமி ஞானப்பிரகாசரவர்களிடம் பெறலாம்.

திருக்குறள் ஆராய்ச்சி:— இஃது 'ஜைனசமய சித்தாந்தவிளக்க'த்துடன் கூடியது; காஞ்சீபுரம் ஸ்ரீ. அநந்தநாதநயினார் அவர்களால் மிகவும் விரிவாக எழுதப்பெற்றது; சுமார் 500 பக்கங்களளவுள்ளது.



"சமயக்கணக்கர் மதிவழிகூறாது உலகியல்கூறி"ச் சென்ற திருவள்ளுவனார் ஜைனமதத்தையே சார்ந்தவரென்றும், அவர் திருக்குறளும் ஜைனசமய சித்தாந்தங்களையே வெளியிடுகின்றதென்றும் காட்டுதற்கு முயன்று எழுந்தது இவ்வாராய்ச்சி நூலாகும். ஜைனசமயக்கொள்கைகளும் மற்றும் சில அரிய விஷயங்களும் இப்புத்தகத்தால் அறியலாவன. விலை ரூ. 2. சென்னை, ஜியார்ஜ்டவுண் 21, பாரிஷ் வேங்கடாசல ஐயர் தெருவில் மகா-ள-ள-ஸ்ரீ தி. ஆதிநயினார் அவர்களிடம் கிடைக்கும்.

கந்தரனுபூதி:— இஃது, அருணகிரிநாதர் அருளிய மூலத்திற்கு வேதப்ரவசனமந்திரம் சிவத்தியானனந்த மஹரிஷி எழுதின விருத்தியுரையுடன் சேர்ந்தது. அனுபூதியின்தன்மை, அத்வைதத்தின் பெருமை, கௌமாரமதம் தோன்றியகாலத்தின் நிலைமை முதலான விஷயங்கள் இப்புத்தகத்தில் உரைக்கப்படுகின்றன. அன்றியும் மூற்காலக்கோட்பாடுகளைத் தற்கால நாகரிகத்திற்கும் கலையுணர்விற்கும் பொருந்துமாறு இதில் நிரூபித்திருப்பது குறிப்பிடத்தக்கது. உரையாசிரியர் தம் அறிவின்பரப்பால் அளவிட்டு எழுதிய 'கூடார்த்ததீபிகை' என்னும் இவ்விருத்தியுரையின்பெருமையை இங்கு விரித்துரைத்தல் இயலாது. விலை ரூ. 1. விலாசம்:—முருகவேள்புத்தகசாலை, 12, கணபதிமுதலிதெரு, இராயப்பேட்டை சென்னை.

சிவபூசைவிளக்கம்:— இஃது யாழ்ப்பாணத்து அச்சுவேலி பிருஹ்மஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள் இயற்றியது; சிவபூசைசெய்து வழிபடும்முறையை வடமொழி தென்மொழி நூல்களின் ஆதாரவோடு தெளிவாக விளக்குவது; விரிவான அநுக்கிரமணிகையுடன் இருநூறு பக்கங்கள்கொண்டது; சைவராயுள்ளார் எல்லார்க்கும் இன்றியமையாதது. சைவாகமங்கள் முதலான பலநூல்களிலும் பரந்த ஆராய்ச்சியறிவை இதன் ஆசிரியர் இப்புத்தகத்தில் நன்கு பயன்பெறச்செய்துள்ளார். விலை ரூ. 2. கிடைக்குமிடம்:— பிருஹ்மஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள், அச்சுவேலி, யாழ்ப்பாணம் (இலங்கை).

நம்மாழ்வார்பிள்ளைத்தமிழ்:—இது, ஆழ்வார்திருநகரி ஸ்ரீமாந். பெரியன் வே. நா. ஸ்ரீநிவாஸஐயங்காரவர்களின் நன்முயற்சியால் பழைய ஏட்டுச்சுவடியினின்று இப்பொழுது அச்சுப்புத்தகமாக வெளி

வந்துள்ளது. சொற்பொருட் சுவையுடன் சந்தவின்பஞ் செறிந்து, பயில்வோர்க்குத் தெவிட்டாத தெள்ளமுதாய் இன்பமளிக்கும் இப்பழ நூலின் ஓர் அறுபத்தைந்து செய்யுட்களே இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. எஞ்சியபகுதியும் கிடைக்கப்பெற்று விரைவில் வெளிவருதல் மிகவிரும்பற்பாலது. இதனைப் பதிப்பித்த ஐயங்காரவர்களின் சமயப் பற்றும் தமிழபிமானமும் போற்றற்குரியன. விலை அணா 4. கிடைக்குமிடம்:—பெரியன் வெ. ஸ்ரீநிவாஸன், திருஞானமுத்திரைப் பிரசுராலயம், ஆழ்வார்திருநகரி.

திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக்குறம்:—இதுவும் பழைய ஏட்டுச் சுவடியினின்று எழுதி, ஷை பெரியன் ஸ்ரீநிவாஸஐயங்காரவர்களாலேயே வெளியிடப்பெற்றது. மாறனலங்காரவுரையாசிரியரான திருமேனி இரத்தினகவிராயர் மரபிலுதித்த திருமேனி வைத்தியநாதரென்பவரின் மாணாக்கர் இதனை இயற்றினரென்று சொல்லப்படுகிறது. இதுவும் சொற்பொருள்வளம் நிறைந்தது; குறமென்னும் பிரபந்தவகையிற் சிறந்ததாக மதிக்குந்தரத்தது. விலை அணா 4. கிடைக்குமிடம்:—பெரியன் வெ ஸ. ஸ்ரீநிவாஸன், திருஞானமுத்திரைப் பிரசுராலயம், ஆழ்வார்திருநகரி.

குசேலர் சரிதம்:—இது, புன்னாலைக்கட்டுவன், பிரமஸ்ரீ சி. கணேசையரவர்கள் எழுதியது; பள்ளிப்பிள்ளைகள் பயிலுதற்கு மிகவும் உபயோகமானது; இனிமைவாய்ந்த எளிய நடையுடையது; அரிய நீதிகளை நன்றாக அறிவுறுத்துவது; பிழையின்றி அச்சிடப்பெற்றது. விலை அணா 6. சுன்னாகம், தனலட்சுமிபுத்தகசாலையிற் கிடைக்கும்.



வேறு.

482 காமர் சாலையிற் காலையு மாலையு
காம வெந்தழற் காகுதி நல்கியே
வாம னன்முதற் றேவரை வைகலு
மேமு றும்படி யேகுடி யேற்றுவார். (௧௬௧)

483 ஞான வேதியர் நள்ளழற் காகுதி
யான தீத்திட வாய்புகை நாடொறும்
வான மெய்வது வாசவ னின்னதாந்
தான நின்னதன் றேகெனுந் தன்மைபோன்ம். (௧௬௨)

484 மெய்கொள் வேத முழுதுணர் வேதியர்
தய்ய தீமுகத் திற்சொரிந் தூட்டிய
நெய்யின் வாச முதலிய நீடிரு
கையை விட்டக லாதொரு காலுமே. (௧௬௩)

485 சுருதி போல மிருதியுந் தேய்ந்துளார்
வருதி யானத் துருமவி மாந்திய
பருதி மூவழற் றீம்புகை பாங்கர்பார்
கருது மோசனை வாசங் கமழுமே. (௧௬௪)

486 தஞ்ச மென்றவர் தம்மைத் தயாவினு
லஞ்ச லென்றரு ளந்தணர் சிந்தையு
மெஞ்ச லின்றருச் சிக்க வெடுத்ததேங்
கஞ்ச நாண்மலர்க் கைகளு மீரமே. (௧௬௫)

வேறு.

487 காமதே னுவுமீன் னிவர்[1]நிரு மித்த
கருமமே யுணர்ந்துமுத் தழல்வா
ழோமகுண் டத்த யாகசா லையுளா
யுறுபணி விடைவிரும் புமதாற்

[பி-ம்.] [1]நியமித்த. சா.

ருமதந் தவிர்ந்த ராசத குணத்தொண்
சதுமுகக் கடவுளாங் கமலப்
பூமக னிவர்தந் நித்தியக் கருமம்
புனிதரா மகளோடும் புகழ்வான். (ககூசா)

488 விதித்தவேள் விகளோர் நூற்றினுக் குரிமை
வேண்டுமக் கடவுளர் பல நண்
மதித்ததெக் கடவு ளதற்கதற் குரித்தா
மந்திரந் தந்திர மபிர்த
முதித்தெமைக் கொள்க கொள்கவென் றெதிர்கொண்
டுதவுமா னுலோபமாங் கெவனோ
வெதிர்ப்படு மெதிர்ந்தா ரிவர்பெய ருரைக்கி
லேமரா டைடவதுந் திடனே. (ககூஎ)

489 இரணியங் கனக மிரத்தம திரத்தங்
கிட்டின மெழில்வெரு ரூபங்
கிரணமே தருநற் சுடரெனத் தாலுக்
கிளைத்ததேழ் நயனரன் கெழுகை
சிரமொடு சிருங்கி யிரண்டுநான் காறு
செவிபத மூன்றெதுஞ் செந்தீத்
தாணிமேற் றண்ணென் றந்தணர் படிவந்
தரித்துயிர் தளிர்த்ததன் மையினார். (ககூஅ)

490 நங்கைமார்க் கமைந்த விழுமிதாங் கற்பை
நாடலு மனத்தொடு மதித்தென்
றங்கைமா ரிவரென் றருந்ததி வடபாற்
சரித்திடுந் தொழும்வியந் தனளாய்ச்
செங்கையாற் றழுவ விரும்புமிவ் வுலகிற்
சிறந்தமே தருமா பினரா
மங்கைமார் கற்பிற் கிவர்பெருங் கற்பே
மதிப்புதல் வசிட்டன்மங் கையுமே. (ககூகூ)



491 குற்றமா கியகா மாதிமூன் றினையுங்
குவலைய மதிப்பவே கடந்த
சிற்குணா திகரிற் செறிதரி லவர்பொற்
சேவடி தொழுதகங் கொழுகர்
நற்குணத் தவரைத் தொழுமெனத் தொழுது
நவையிலின் னமிர்தருள் கவெனுக்
கற்புடை மகளி ரெழும்பெயர் சிறப்பக்
காமர்பா லடிசிலே புரப்பார். (உ00)

வேறு.

492 யாணர் நிலம்போற் பொறைபுனல்போன்
றிசைதண் ணளிநன் மனுராம
பாண மெனலாம் வாய்மையுடன்
பருதி யெனுந்துய் மையராகிக்
காண வினிய சதுமறையோர்
கற்ற தரித்த மதுரகவி
வாணர் புகழுத் தமதொழுக்கம்
வழுவா தொழுகுந் திறத்தாரே. (உ0க)

493 களைவா யெமது துன்பமதைக் களையா தருள்வா யைவருய்ய
வளைவாய் [1]வைத்தாய் நீயன்றி மற்றார் களைக ணெமக்கென்றுங்
கிளைவாய் நமன்வன் றமர்க்கஞ்சிக் கெதிநீயென நின் னடியடைந்தே
மளைவாய் வைத்தா யருளெனவா ழும்மார்க் கழுமில் லறத்தமைந்தார். ()

வேறு.

194 இருபி றப்ப ரியற்றமுத் தீயினர்
வருபி றப்பொழி நான்மறை வாய்மையர்
குருப மைந்து மொடுக்கின ரங்கமாஞ்
சொருப மாறுந் தொடர்ந்தறி கேள்வியர். (உ0௩)

---

[பி-ம்.] [1]வைத்த. கா.

495 ஓத லோதுவிக் குந்தொழி லுள்ளுவர்
நீத லேற்ற லிவையன்றி முந்துநூல்
வேத வித்தென வேட்டல்பின் வேட்பித்த
லாதி காலத் தறுதொழின் மேயினார். (௨0௪)

496 ஐய மின்றி யருமறை யோர்மறை
மெய்யு ணர்ந்தமை கூறவும் வேண்டுமோ
மையல் பானைக் குதவிய மாயனே
தெய்வ மென்னத் தெளிந்தது முண்மையால். (௨0௫)

497 ஆறி ரண்டுமைம் மூன்றுமொன் பானதாக்
கூறு கொண்டமுந் நூல்வலங் கொண்டுளார்
தேறு மாறிரு நான்கெனச் சென்றவாண்
டேறி னல்லறத் தின்பமு மெய்துவார். (௨0௬)

498 முனிக்க ணங்கண் முனிவுறப் போய்வனந்
தனித்த கோழைத் தவறினை யெண்ணியே
செனித்த வில்லிற் சிவணிய வில்லறந்
துனித்து நல்லறத் துப்புர வுட்கொள்வார். (௨0௭)

499 ஓதி நூல்க ளுணர்ந்துமுத் தீவளர்த்
தாதி மார்க்கத் தவிகள் சொரிந்தறம்
போதி மைந்தருண் டாய்க்கடன் போக்கியே
நீதி யாச்சிர மந்தொறு நின்றுளார். (௨0௮)

500 இதய தாமரை மேல்வினை வெய்திய
சிதைவி லாமறை யாஞ்செழுந் தேறலை
யுதய ஞானவண் டுள்ளுவர் துண்ணவுட்
புதைய விச்சை யெனும்பசி போக்கினார். (௨0௯)

501 எண்ணி றந்தபல் வேள்வி யியற்றலால்
மண்ணி லிந்திர ராமென வைகுவார்
திண்ணி தாந்தவ முற்றிய செய்கையாற்
புண்ணி யத்துற வோரெனும் பொற்பினார். (௨௧0)



வேறு.

502 ஆறி ரண்டிலோன் பதினிலை பலகுறு லணைந்தே
தேறி நன்முகுத் தத்துடன் சாதகந் தெளியக்
கூறி நட்டமுட் டியினொடு சிந்தனை குபேரற்
கூறு செய்தரா வூர்நிலை மழைப்பெய லுரைத்தும். (௨௧௧)

503 போதி டத்தனி வாந்தரு முகுந்தன்முன் புரந்த
மாதி டத்தன்மா திடத்தன்மெய்த் திடமனப் [1]படுகோட்
கேதி டத்தினு ளிடமிது பொழுதிது செயலென்
சோதி டத்தினாற் சுராசுரர் குரவருந் துதிப்பார். (௨௧௨)

504 அன்றைக் காரணத் தெய்திய தகலுகா ளகலு
மென்றைக் காகினு மெனத்தவிர்ந் திருந்திறத் திடர்செய்
யொன்றைக் குன்றலின் மிகுதலி னுற்றதென் றுணர்ந்த
பின்றைக் காதுவன் பிணியுளான் பருவமும் பிறவும். ௨௧௩)

505 நோயு டக்கிய செவ்வியு மருந்தையந் நோய்க்குத்
தாயு முத்தமத் தாதையும் போன்றருள் சால்பா
லேயும் வாய்மையி னருத்தியப் பிணியொழி யியற்கை
யாயுள் வேதியர் கடவுளர் மருத்துவ ரனையார். (௨௧௪)

வேறு.

506 பூவி னான்முக னாற்றென் பொதியில்வாழ்
தேவி னாற்புகழ் செய்கைய ராமெனுந்
தாவில் வேதியர் தன்மையென் புன்மையா
நாவி னாலுரைக் கின்றது நன்றரோ. (௨௧௫)

மூன்றாவது: அகநகர்வாழ்த்துச் சருக்கம் முற்றும்.

[பி-ம்.] [1]படுகோள்கட். சா.

ஸ்ரீ:

## ௪. கோயில்வருணனைச் சருக்கம்.

507 பழமொழிச்செப் பேடுகண்டான் பழுதெண் ணாத
பல்லவர்கோன் சுந்தரபாண் டியன்மெய்ஞ்ஞான
மழவனைத் தழுஉகண்டா னருளின் வாய்மை
வளம்பயில்சொற் குருபரம கயினன் செல்வத்
தழகுபெறுஞ் சடகோப தாத னென்போ
ரமைத்தபணி யதறகத சாத் திரம தாய்நூற்
கழகமதாய்த் திருமகள்கோ னுறையு ளாக்குங்
கன்மதிட்கோட் டத்தினைமேற் கழற லுற்றேன்.

508 செம்பொன்வட வரைவடதட் டாழ்ந்த காலைத்
தேவர்குழாம் வேண்டலிற்றென் பொதியிற் போந்த
கும்பமுனி யுடனணி மலையுண் டாக்கிக்
கொழும்பொனெடுஞ் சிகரமவை யாதி யாக
விம்பரமைத் தனனயனென் றுரைப்ப தல்லா
லிவ்வுலகத் தங்கமெனு வுரையி லாந்து
மும்பர்மதித் திடவமைப்போர் சமைத்த தன்றென்
றுறமயனு களனும்வியந் துரைப்ப தாமே.

வேறு.

509 திண்ணிதா மூவான மூவானமேற் செகதி
செகதிமேற் பதுமவான் செகதி
கண்ணகன் றளவா மக்கிரபட்டங்
கண்டமொண் பட்டிகை யெனவே
பண்ணல்சா ரூபபி டத்தின்மே லதிட்டா
னத்தினும் பதுமம்வான் செகதி
வண்ணமே தருசீர்க் குமுதகங் கண்ட
மதித்தபட் டிகையிவை திகைமேல்.

510 பரித்தகா னிள மேற்குட தாடிப்
பலகைமஞ் சமதெனப் பகுத்துத்
தரித்தவுத் திரத்தி னொடுங்கபோ தகமேற்
சமைந்துள பிரத்திர மெனநூல்
விரித்துள கருங்கற் பணிகடுச் சாலை
விளங்குகோ புரத்துமா தவனைத்
தெரித்துறு மகாரை தொறும்பல விதமாய்த்
திரட்டிய கும்பகால் வகுத்தே. (௪)

511 அகத்தினும் புறத்து மமைத்தவுத் திரத்தி
னன்னகன் னிரையரி நிரைத்தாய்த்
தகத்தக வமைத்து மூவானமே முதலாச்
சாற்றிய மானமீ றெனலாய்ச்
செகத்தவர் மதிப்ப வாறுகூத் திரமுந்
திருத்தக வமைத்தபின் பதன்மேன்
மிகத்தெளி வினாய்ச் செங்கலா லேம
மேயகா னிளமு மமைத்தே. (௫)

512 பாங்குற வதன்மேற் பலகுட தாடிப்
பலகைமேன் மஞ்சமா மெனமே
லோங்கிய கழுத்தோ டுத்திரஞ் சிகா
முயர்ந்தபண் டியினொளி பொன்னு
லாங்குயர் தூவி யமைத்தும் வெண் சுதையா
லமைந்துள வுருச்செயா வமரர்
தாங்களி கொளத்தே வரையுறு விமானந்
தபதிய ரமைத்தசால் பினதே. (௬)

இவை யாறுந் தொடர்.

513 மீனமே யாமை வராகமே நாரி
வெள்ளிசார் வாமன மிராம
ராமபேர் மூவர் கண்ணனென் பவரை
யனுகுமா மண்டபந் தொறுநற்

றானமே தானென் றமைத்தமெய் யுருவைச்
சந்தய மறத்தரு மலர்தூஉய்
ஞானவா னவருந் துதிப்பா லுருவின்
றட்டமென் னினிப்புகல் வதுவே. (௭)

514 வெளியினை வகுத்த தூணினைக் குறுகி
மெய்யில லுயிருளா னெனநீர்
நீளிடைப் புவன முரைப்பதென் னிரண்டு
நிறைவுளா னென்பதின் மதமா
வாளிமுன் னெதிர்ந்த தற்புத மெனவு
மமைத்துளா ருருச்செய்தா னெனவே
சூளினை யிடவுந் திடன்கொளா ருருவின்
றோற்றமென் னினிப்புகல் வதுவே. (௮)

515 பித்தியிற் சுதையை வழித்தன ராகிப்
பெரும்புலி முன்னர்மான் பிணையைப்
பத்தியிற் பொறிப்ப நிற்பதை வியந்தும்
பாரிசா தங்கழுங் கனியுங்
கொத்தவிழ் மலரு மணிகளும் புரவாக்
குறிப்பெவ னென்னவே குறித்தோர்
சித்திர மெனவுந் திடன்கொளா ருருவின்
றிருத்தமென் னினிப்புகல் வதுவே. (௯)

516 வாயில்கா வலராஞ் சண்டரும் பழிப்பின்
மதிப்பிர சண்டரு முதல்வன்
கோயின்மா மதிளின் வாயில்வாய் நிற்பக்
குலிசனு தியரெனு மவராங்
கேயின காலை யிறைவனின் னமிர்தத்
திருவருஞ் சித்தசித் துடனின்
டாயினர் திடனென் றிறைஞ்சவர் திடன்கொள்
ளாதவ ரெவருல கினிலே. (௰)



வேறு.

517 எக்கலையுந் தெரிந்தறத்தின் வழிநின் றாராய்ந்
திருமைக்கு மூதியமென் றெண்ணி நல்லோர்
தக்ககடற் புவியினிற்பூந் துளபத் தார்க்குத்
தனித்தனிகேத் திரங்களெனச் சமைத்த மேன்மைத்
திக்கிருநான் கினுமமைந்த மதிளு மிந்தத்
தெய்விகப் பொன்மதிளுஞ் செம்பொன் னாப்
பக்கநிலத் தமைத்தகுரு மணியுஞ் சோதிப்
பருமணிநா யகமுமெனும் பான்மைத் தாமே, (௧௧)

518 விரிதருவெண் டிரைத்திருப்பாற் கடலே போலும்
விளங்குதுகிற் கொடித்தவள மாட வீதி
வரிமதிளுங் கோபுரமு மைவாய்ச் சேடன்
மண்டலித்துப் படநிமிர்த்த வண்ணம் போலுஞ்
சொரிகதிர்ப்பா லுவுமதியு மருங்கு தோன்றச்
சூழ்கருமா முகில்படிந்த தோற்ற மாடல்
புரிகதிரா ழியும்வளையுந் தரித்த பான்மைப்
பொருளிருகண் டுயிலுவந்த பொலிவே போலும். (௧௨)

519 பொன்மதிலென் பதுகரையாய் நாப்பண் டாழிப்
புடையெனலாய்த் துகிற்கொடிவெண் டிரையாய்ப் பீட
முன்னியமந் தரமெனலா பொன்பொற் கம்ப
முதயமதி யெனவிளங்கு முடக்கு பாசம்
பன்னகமா மெனவிமையோர் பாங்கர் மேய
பத்தரெனக் கோபுரநற் பதுமைக் கேற்ற
மன்னவனு மெனமருங்கு வழித்த சாந்த
மருந்தெனலாய்த் தினகரப்பா லாழி மன்னோ. (௧௩)

வேறு.

520 சிகர கோபுர மகுடம்வெண் டிங்கள்சேர்ந் தனவாய்ப்
பகரு வானமு முரகனுஞ் சிரிப்பதிர் தனவா
யகல நாவலர் நீவொருங் கெய்தினு மமைக்கும்
புகலி டத்தவா மதிளையா ளிடல் புரிந்தார், (௧௪)

521 உச்சி வானக டுரிஞ்சிகா னிலமகத் தொடுக்கும்
வச்சி ரப்பொருப் பொன்றினைப் பலவடி வாய
விச்சை தங்கிய பயனெனு மருந்தொழின் மேன்மைத்
தச்ச னீணிலத் தினிற்சமைத் தனனெனத் தகுமே. (௧௫)

522 உலப்பி லந்தண ரருமறைப் பொருளுரை யொலிவிட்
புலப்பு யற்றிரண் மட்புலத் தொலிப்பன பொருவுங்
குலத்தொ டுந்தவ முயல்குநர் தமிழ்மறை கூறல்
சிலப்பு வெண்டிரைப் பாற்கட லொலியெனத் தெழிக்கும். (௧௬)

வேறு.

523 ஈசனெம் பெருமா னுந்தியங் கமலத்
தீன்றசெய் புணர்த்தயாக் கையிடை
யாசறப் பதிந்த வணுத்தி ணினைவி
னகத்தெழு வளிதுரப் பதொடு
மோசைமுற் றுமை வாயினைத் திறவா
துச்சரித் திடுபின்மத் திமையாய்
வாசகம் பயில்வா பொருவனங் காப்ப
வைகரி யென்பதோர் வாக்காய். (௧௭)

524 செவிப்புலத் துறவே யொலிப்பதா லெழுதுந்
திறத்தினு லொலியெழுத் தெனவுற்
பவித்தவை முதல்சார் பெனவுநாற் பானுப்
பகர்பெய ரிரண்டினி ரிரண்டாய்ப்
புவிப்புல மையர்தா முறையினத் தினொடும்
புகல்பிறப் பிடமுழப் பையக்
தவிர்த்தவெண் ணிரண்டெட் டேழிரண் டுருவர்
தமிதமி புள்ளிபெற் றிலவாய். (௧௮)

525 ஒன்றிரண் டொருமுன் றரையுடன் காலென்
றுணர்ந்துமாத் திரையினை வகைத்தாய்க்
சென்றபின் முதனீ றிடைநிலை யெனவே
திரிதப் படமொழி யகத்தாய்ப்



பொன்றலில் போலி யுயிருடன் மேய
புணர்ச்சியி னிரண்டுமாய் நான்கா
மென்றசா ரியைத்தா யொன்றொழி நானூ
றென்பவாய் விரியெழுத் தியலும். (௧௯)

526 ஒருதனி யெழுத்தாற் றொடரெழுத் தவற்று
ளுடலுயிர் முதலவீ றெனலா
மிருபத மொருநான் கிரட்டியாய்ப் பெயரா
தியவொரு நான்கினெண் ணுங்காய்ப்
பெருகுமப் பதமுன் விகுதியா தியதாம்
பெய்தியல் பொடுவிகா ரமுமாங்
கருவிசெய் கையின்வேற் றுமையொடல் வழித்தாங்
காட்சிசார் பதமுடன் புணர்ப்பும். (௨0)

527 பெருகுமுத் திணையைம் பாலினைத் தெருட்டும்
பெயர்வினை யிடையுரி யனவாய்க்
கருதிய வியற்சொ லாதிநான் கினொடுங்
கலந்துவேற் றுமைகளுக் கிடமாய்
ஒருமொழி யுடனே தொடர்பொது வெனலா
யுறுதொகை நிலைதொகா நிலைத்தாய்
வருமிட மூன்றோ டிரண்டென முனிவர்
மதித்துரை வெளிப்படை குறிப்பாய். (௨௧)

528 இடுகுறிப் பெயர்கா ரணப்பெயர் பொருளா
தியபெயர் பொதுச்சிறப் பெனச்சொற்
படுபகு தியபேர் பொருண்முத லாறும்
பயனெனத் தன்னுளார் தோற்றத்
தொடுபெயர்க் கெழுவாய் வேற்றுமை யெனப்பின்
புறுபய னிலைகளாற் [1]றேற்றும்
வடிவுறு மருபா றீற்றினேற் பதுமாய்
வாய்ந்ததோர் விளியொடெட் டெனலாய். (௨௨)

---

[பி-ம்.] [1]தேறம். சா.

529 தொகைப்பெயர் களுமப் பயனிலை யேற்குந்
தொடர்புறீஇ யாதியும் விளியு
மிகைத்தவல் வழிக்கு மெய்வதங் காலம்
விளம்பிய திணையிட மூன்று
முகப்படும் வினையும் வேற்றுமை யுறாதே
முற்றுமெச் சமுமெதிர் மறையு
மகப்படு வனவாய் வேறுபல் குறிய
வாம்வினை யெச்சமும் பிறவும். (௨௩)

530 முன்னுரைத் தனவா மெச்சமே யன்றி
மூதுணர் வினர்களா ராய்ந்து
பின்னுரைத் தனவாஞ் சொல்லொடு குறிப்பிற்
பெறப்படு மெச்சமீ ரைந்து
முன்னிய பொருள்கோ ளொன்பதும் விகார
மொன்பதுந் தொகைதொகா நிலைகள்
பன்னிய விருமூன் றவற்றொடைம் மூன்றும்
பகுதியு மொழிந்தன பலவும். (௨௪)

531 இத்திறத் தனவாம் பெயர்வினைப் பின்முன்
னியைந்தவெண் வகையவா முரையுட்
டத்தம பொருளால் விரித்தவீ ரேழாஞ்
சால்புடன் மறித்துமைந் நான்காப்
வைத்தவா மிடைச்சொற் பலபொருட் கொருசொல்
வருமொரு பொருட்பல சொல்லா
யுய்த்துண ருரிச்சொற் பெயர்வினைக் கடையா
யுறுகுதற் பெயராவாம் வகையும். (௨௫)

532 முற்படத் திணையேழ் முதல்கரு வுரியா
முறையிரண் டேழிரண் டொருபான்
பொற்புடைக் கைக்கோ ளிரண்டினுட் களவிற்
புணர்ச்சிநான் கெண்வகை மணத்துட்
சொற்பயில் யாழோர் மணமெனக் கிளவித்
தொகைபதி னேழுடன் வரைவிற்
கற்பினி லிருமூன் றேழொடை யாறுக்
கைகிளை முன்னர்நான் கெனலாய். (௨௬)



533 அவனியிற் புனித மடந்தையென் றறிந்தோ
னறிந்திலா னெனவவ யவத்தை
யுவமையிற் புணர்ந்த வுருவக வாய்பாட்
டெனிலைச் சிலேடையா யுரைக்கை
தவறற வுணர்த்தும் வழிநிலைக் காட்சி
தன்னையுங் கைக்கிளை யெனலுங்
கவலையுற் றுணர்ந்து கலந்துகை புனைந்தோன்
கருத்தறிந் ததற்பின்னுல் வகைத்தாய். (௨௭)

534 வண்டொடுந் தனதா மனத்தொடு நயந்து
வலந்ததான் மடந்தைமாட் டைய
முண்டிலை யென்ப துணர்ந்துமூர் தியில்வந்
தொழுகலுங் காவிடை முதலே
கண்டபின் வரைந்து கொண்டதீ றுய
காலமு நடுவணைந் திணையும்
பண்டிதர் மொழிதன் முதலுமாய் மணமும்
பகரிலைந் தாமெனும் விரியும். (௨௮)

535 பெண்ணர சியொடும் பின்முறை வதுவைப்
பெருங்குலக் கிழத்தியு மல்லா
துண்மையா யொருவற் குரிமைபூண் டவரை
யுயர்பாத் தைபரொனு முறையு
மண்ணல்சார் கிழவர் நாற்குலத் திறொடு
மடியவர் பாங்குமா மெனலும்
வண்மைசால் பிறவுங் களவினு ளொன்றே
வரைபொருட் பிரிவதாய்க் கற்பில். (௨௯)

536 பிரிவிரு மூன்றாய் வாயிலீ ரேழாய்ப்
பெருமைசான் மக்களைப் பயந்தே
யுரிமையில் லறஞ்சார் நிலைபுனைந் துறையோ
டுலகிய லெனுந்திறத் திரண்டாய்
விரிவிரிப் பனவாய்த் துறவறத் தாகி
வீடடை வதும்பக ரறிதற்
கரியவா மகப்பாட் டுறுப்புமெழ் திணையை
யடைந்ததன் புறத்தவாய்த் தோன்றும். (௩0)

537 வெட்சியே முதலா மேழ்திணை யிறைடும்
விரவிய வழுவெனுங் கரந்தை
யுட்கொளு முழிஞைத் துறையுளா நொச்சி
யுடனவ மெனவிரித் ததன்மேல்
விட்புலம் புகழப் பொதுவிய லொடுமுன்
விளம்புகைக் கிளைபெருந் திணையு
மட்புலம் விளக்கத் திரட்டிய வெண்பா
மாலையிற் படலமீ ராறில். (௯௧)

538 இருபது பதினொ லொன்றினை மேற்கோ
ளிருபஃ திரண்டுமேற் கொண்ட
விருபஃ திருபத் தொன்பதொன் பான்மூ
வெட்டுநா லெட்டின்மே லொன்று
மிருபது நாலு மிரட்டிமுப் பானே
ழிருபதொன் றின்மையாங் கதன்மே
லிருபது பதினொ றெனுந்திணை [1]துறைதேர்ந்
தியம்பிய மும்மையான் மன்னோ. (௯௨)

539 நிறையிரண் டசைசீர் முப்பதேழ் தளைத்தாய்
நிகழ்த்திய வடிகளோ ரைந்தா
முறையயில் வனவாய்த் தொடைகளுற் பத்து
மூன்றுமும் மூன்றெனும் பொருள்கோ
ளுறைதரும் விகாரம் வனப்பின்வண் ணமுமுத்
தியுமிரு நான்குமைந் நான்கு
மறையுமெண் ணான்கு மைந்தின மூன்று
யாறெனுஞ் செய்யுளு முணர்ந்தே. (௯௩)

540 சொற்றசெய் யுளினை முத்தகங் குளகந்
தொகைநிலை தொடர்நிலைப் படுத்திக்
கற்றவர் றினன்முத் தகந்தனி நிலைத்தாங்
காட்சியுங் குளககால் வகைப்பேர்

[பி-ம்.] [1]துறைதோய்ச் ச.



பெற்றவை பலபாட் டொருவினை யிறைடும்
பெயரொடு முதலிடை கடையாய்
முற்றுவ துணர்ந்துந் தொகைநிலை பொருவன்
மொழியெனப் பலர்மொழி வதுமாய். (௯௪)

541 சொலத்தரும் பொருளா தியிற்பெய ரெட்டாய்ச்
சொல்லினற் பொருளினன் மூன்று
நிலைப்படு வனவாந் தொடர்நிலை பொருள்க
ளிறைந்திடா மையினிறைந் தமையா
னிலக்கண நடைசார் காப்பியம் பெருங்காப்
பியமென வங்கா லேழும்
புலப்படு பாக மூன்றெனக் குணங்கள்
பொதுவென விளம்புமீ ரைந்தும். (௯௫)

542 உவமையா தியவாம் பொருளணி களுமுற்
றோரெழுத் தினிற்றொட ரெழுத்தாற்
புவனம துணர்த்த மடக்கெழு வகைத்தாய்ப்
புணர்த்தமுந் நூற்றுமூ வைந்துங்
கவர்பல பலவாஞ் சித்திரக் கவியுங்
கருத்துணர்ந் தித்திறத் தினொடு
நவமுறு மெண்ணெண் கலைப்பெரும் பனுவ
னல்வினை யுறப்புணர்த் ததனால். (௯௬)

543 கமலைகா முறுகார் கருணைவான் கடலக்
கடவுளர் கடவுளா மென்ற
வமலனூர் முதலாய் மூவரா னவன்ற
னழகிய சொருபமா தியன
நிழலர்தாம் வியப்பான் புகழும்வாய் மையைச்சார்
நிலைமையே வாழ்வெனு நினைவாற்
றமதுமன் னுயிர்கட் காக்கமே படைத்த
சவிதைசால் புனிதா வலர்தாம். (௯௭)

544 மலக்குரம் பையினுட் பிறந்திறந் துழல்கை
மாநிலத் தின்னும்வந் துறுமை
கலத்தகைப் பரம பதத்தினைப் பெறுவான்
ஞானநன் னூலையாய்ந் தெஃகாற்

கலக்கமற் றதுபோன் றிகலற வுணர்வு
கடவுண்மேற் கொழுந்துவிட் டெழுந்து
செலச்செலப் போர னந்தமெய் தவதாஞ்
செல்வமே புரப்பதத் தலமே. (௧௮)

இவை யிருபதுந் தொடர்.

545 வணக்கருந் தலைமை யுரனுடை முனிவர்
வருத்தநுண் ணியவிலக் கணத்து
ணுணர்த்துவா ரின்றி மருண்டதைப் பலகா
லுள்ளுறீஇத் தெருண்டநுண் ணுணர்வார்
[1]புணர்த்தகன் பனுவ லகத்திலக் கியத்தாற்
புதுவது புணர்த்துளார் முதனூல்
கணப்பொழு தினுங்கை விடாதுரை தெரிவார்
கங்குலும் பகலுநன் கனவும். (௧௯)

## வேறு.

546 மாட்சிசார் பெரிய யாழே மகரயாழ் சகோட யாழ்செங்
கோட்டியா ழெனப்பேர் நான்காய்க் குமிழ்கருங் காலி கொன்றை
காட்டிய தனக்கு மாகக் கணித்தவோ ரேழீ ரெட்டா
யாட்சியோர் பத்தேழ் மூவே ழாம்வகை நரம்பை மன்னே. (௪௦)

547 வகுத்தபத் தருறுங் கோட்டின் மாட்டமோ டகத்திற் சேர்த்துப்
பகுத்ததோர் பண்ண லாதி பாரித்த தொழில்க ளெட்டாற்
றொகுத்தவாம் வார்த லாதி சுட்டிய கரண மெட்டான்
மிகுத்தகெஞ் சாதியாக விளம்பிய தான மெட்டால். (௪௧)

548 நாட்டங்க ளிமைத்தல் கண்ட நடுக்குற லெயிறு தோன்ற
வீட்டங்கொள் புருவ மேற லின்றியே நரம்பு நாவிற்
கூட்டஞ்செய் தேக மான குறியென வுள்ளர் ளந்த
பாட்டங்க மீதே யென்னப் பாடுவார் பலரா மோர்பால். (௪௨)

[பி-ம்.] [1]புணர்த்தகன்.தீசா.



மனத்திற் றேறு மாணாப் பேதைமை
முப்புரம் போல வெப்பெழும் வன்னகை
விளையா தின்னகை விளைத்தலி னக்கை
வளையா மேருவை வளைத்திடு மாபோல்
என்னையாட் கொண்டு முன்னைத் தீவினைக்
கொல்வாய்ப் புலிமுலை புல்வாய்க் குதவிய
தொல்வினை யென்ன நல்வினை பயப்பப்
புழைக்கை நீட்டிக் கழைக்கரும் பெடுத்துத்
திருந்துகல் லானை யருந்திடு மாறு
வெவ்வினை யேனு மவ்வினைப் பயத்தின்
ஊறுதே னருந்தி யேறுபோற் றிரிதலின்
மூன்றூற் சிறுவ னுண்மறைக் கிழவன்
பழுத்த நீறு மெழுத்தோ ரஞ்சும்
அல்லாற் கடவு ளில்லையென் றுணர்ந்த
ஞானப் பிள்ளை தானுயிர் நடுங்க
மாற்றருந் துயர்தருங் கொடிய
கூற்றைச் சீறுதல் குரைகழற் குரித்தே. (௨௮)

## வெண்பா.

௨௯. உருத்தக்கான் மாய்ந்தங் குயர்ந்தபுகழ்க் கூடல்
ஒருத்த னருளுங்கா லுண்டாய்க்—கருத்தனவன்
காண்பித்துக் காணுமிந்தக் காசினிக்கு ணென்னும்
வீண்பித்துக் காணும் வினை. (௨௯)

17. தேறம்—நான் தேறும். 19. விளைத்தலின்—நினக்கு விளைத்தலினால்; என் பேதைமைகண்டு நீ நகைக்கின்றாயென்பது கருத்து. 20–21. "தெவ்வரை மெய்யெரி காய்சிலை யாண்டென்னை யாண்டுகொண்ட, செவ்வரை மேனியன்', (திருச்சிற்.) 21. தீவினை—எனது தீவினை. 23. தொல்வினை—பழைய செயல்'

விதிக்கு மாறாக என்னை யாண்டுகொண்டருளின தன்மையால், பூங்கழலுக்கு, விதித்த விதியை நீக்கிக் கூற்றைச் சீறியது வழக்கேயாகும்.

௨௯. உருத்தக்கால்—கோபித்தால்; என்றது சங்காரகாலத்தைக் குறிப்பித்தது. காண்பித்து—காண்பிக்க. காணும்: முன்னிலைப்பன்மை அசை.

கலித்துறை.

௩௰. வினையள வாய்நின்று வேறா யருள்வியன் கூடற்பிரான்
தனையள வாதவர் தாழ்வறி யார்தண் டுறைக்கமல
மனையள வானெண்ண வொண்ணாத் திருமுடி வாய்த்ததென்றால்
தினையள வானு முயலாத கூனிளந் திங்களுக்கே. (௩௰)

மதுரை மும்மணிக்கோவை முற்றுப்பெற்றது.

---

௩௰. அளவிடத்தொடங்கியவர் தாழ்வறிக: "யாதவ குலத்துநெடு மாதவன் மருப்புடைய வேனமிரு கத்துருவமா, வேதமொழி பெற்றவய னோதிம மெனப்பறவை வேடமு மெடுத்ததிலையோ, ஓதருணை வித்தகனை மூவரி லொருத்தனென வோதியிடு மற்ப மதியீர், சீதமதி வைத்தமுடி பாதமல ரைச் சிறிது தேடுதெ னினைத்தபரமே" (அருணைக்கலம். 6.) கமல மனை அளவான் — தாமரையை வீட்டின் எல்லையாகப் பெற்றவன்; பிரமன். தண்டுறை யென்றது, சாதிபற்றிய அடை. திங்களுக்கு வாய்த்ததென்றால் அறியார்.

---

உ

கணபதி துணை.

பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை

இயற்றிய

# மதுரை மும்மணிக்கோவை.

இது

மஹாமஹோபாத்யாய — தாக்ஷிணாத்யகலாநிதி

## உ. வே. சாமிநாதையரவர்களால்

பரிசோதித்து

நூதனமாக எழுதிய குறிப்புரையுடன்

பதிப்பிக்கப்பெற்றது.

மதுரைத் தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

செந்தமிழ்ப்பிரசுரம்—௬எ.

மதுரைத் தமிழ்ச்சங்க முத்திராசாலை,
மதுரை.

1932.

விலை அணா 5.

உ

# முகவுரை.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்

## தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

அம்பொ னலவாய், நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர், துன்பம் வீடுமே.

திருச்சிற்றம்பலம்.

மும்மணிக்கோவையென்பது தமிழ்ப்பிரபந்தவகைகளுள் ஒன்று. இஃது ஆசிரியப்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை என்பன முறையே அந்தாதியாக மண்டலித்து வர முப்பதுசெய்யுட்களால் இயற்றப் படுவது; *மூன்றுமணிகளாற் கோக்கப்பெற்ற கோவைபோல இருத்தலின் இப்பெயர் பெற்றது. மூன்றுமணிகளாவன புருடராகம், வைடூரியம், கோமேதகம் என்பனவாம்; "மும்மணியா வனசொன்ன புருடராகம், உறவயிடூ ரியங்கோமே தகமே யென்றுங் கோதுவர்" திருவால, ௨௫:௨௨.

இது சொற்றொடர்நிலைச்செய்யு ளென்னும் நூல்வகையின்பாற் படும். மும்மணிமாலை யென்னும் பிரபந்தம் வேறு; இது வேறு. இந்த வகையில் தொல்லாசிரியர்கள் இயற்றியவை பல உள்ளனவென்று தெரிகின்றது. பதினோராந்திருமுறையில் மும்மணிக்கோவைகள் பல உள்ளன. அவையாவன (1) திருவாரூர்மும்மணிக்கோவை, (2) திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, (3) சிவபெருமான் திருமும்மணிக்கோவை, (4) மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை, (5) திருக்கழுமலமும்மணிக்கோவை, (6) திருவிடைமருதூர்மும்மணிக்கோவை, (7) திருஞானசம்பந்தர்மும்மணிக்கோவை என்பனவாம்.

---

* "முத்தின குத்தியர் மும்மணிக் காசினர்", "முத்த வள்ளியொடு மும்மணி கூட", "மும்மணிக் காசும் பன்மணித் தாலியும்" (பெருங்கதை) என்பவற்றில் மும்மணியென்பது வழங்கப்பட்டிருத்தல் காண்க.

மதுரைமும்மணிக்கோவையென்பது மதுரையிற் கோயில்கொண் டெழுந்தருளியுள்ள ஸ்ரீசோக்கநாதக்கடவுள் விஷயமாகப்பலபட்டடைச் சோக்கநாதபிள்ளையென்னும் கவிஞர்பெருமான் இயற்றியது; விநாயகர் காப்புச்செய்யுளோடு முப்பத்தொருசெய்யு ளடங்கியது.

இத்தகைய பிரபந்தங்கள் பெரும்பாலும் பாட்டுடைத்தலைவர்களுடைய பெருமைகளைப் புலப்படுத்திப் பலவகைச் சொல்லணி பொருளணிகளையும் வருணனைகளையும் பெற்றுவிளங்கும். அவ்வாறே இந்நூலும் அமைந்துள்ளது.

இப்பிரபந்தத்தில் மதுரையிலுள்ள மூர்த்தி தலம் தீர்த்தம் என்பன பலபடியாகப் பாராட்டப்பெற்றுள்ளன. ஆசிரியர், சொக்கலிங்கப்பெருமானை மணிக்கோ, மாணிக்கக்குன்று, கூடற்பிராட்டிக்கு வாய்த்தவர், மதுரேசர், மதுரைப்பிரான், நிறைபெறக்கொடுத்துங் குறைபடாச் செல்வர், மன்னுயிருந்த வற்றாவருட்கடல், அறப்பயிர்காக்குந் திறப்பேரேறு, மும்முலைக்கொடிபடர் ஐம்முகக்குன்றம், அறுசுவைபழிக்கும் நான்மறைக்கிழங்கு, மறிகடலழைத்த மாறாப்பொன்மழை, காய்விடங் குடித்துக் கனிந்ததெள்ளமுதம், கயல்விழிக்கொம்பிற் றயல்வரு தீங்கனி, சொக்கநாதர், சொக்கர், ஆலவாயமுதம், காலன்கூற்று, வில்வேண் மறலி, கல்விச்சொன்மலை, வெள்ளிமன்றாடிய கோ எனப் பாராட்டுவர்.

அம்பிகையை மும்முலைக்கொடி, கூடற்பிராட்டி, கயற்கட்பிராட்டி எனவும், மதுரையைத் தமிழ்க்கடல், முத்தமிழ்க்கடல், செந்தமிழ்தேர்கடல், நான்மாடக்கூடல், கதம்பகானனம், கடம்படவி, துவாதசாந்தத்தலம், சீவன்முத்தித்தலம் எனவும் கூறுவர். இத்தலத்திலுள்ள இந்திரவிமானம், *கபாலிமதில், தமிழ்ச்சங்கம், வெள்ளிமன்றம் என்பன இடையிடையே இந்நூலிற் கூறப்பட்டுள்ளன. பொற்றாமரைத் தீர்த்தம், வையை என்பவற்றைப்பற்றிய செய்திகளும் சொல்லப்படுகின்றன. வையையைத் தமிழறிவையை என்பர் ஆசிரியர்.

---

*மதுரைத்திருக்கோயிலிலுள்ள ஒரு மதிலின்பெயர் கபாலிமதிலென்பது தேவாரத்தாலும் சில பெரியோர்களாலும் இந்நூலாலுமே தெரியவந்தது.



இந்நூலில் ஸ்ரீசொக்கநாதக்கடவுள் இயற்றியருளிய திருவிளையாடல்கள் பலவற்றை ஆசிரியர் எடுத்தாளுகின்றார். அவை: பாண்டியன் கூன்நீக்கியது, இந்திரன்பழிதீர்த்தது, வெள்ளையானைசாபந்தீர்த்தது, பாணைபெய்தது, சரிக்குருவிக்கு உபதேசஞ்செய்தது, மண்சுமந்தது, எழுகடலழைத்தது, சுந்தரபாண்டியராகிவந்தது, கால்மாறியாடியது, பன்றிக்குட்டிக்கு அருள்செய்தது, நாரைக்கு முத்திகொடுத்தது, நான்மாடக்கூடலானது, கடல்சுவற வேல்விட்டது, சமணர்விட்ட பசுவை மாய்த்தது, மதுரையாக்கியது, புலிமுலை புல்வாய்க்குதவியது, கல்லானைக்குக் கரும்பருத்தியது என்பன. கரிக்குருவிக்கு அருள்செய்ததைக்கூறுகையில், "வலியான் பகையும் எளியேன் பிறவியும், தொலைந்திட நோக்கி" என முரண்தொடைபடக் கூறுகின்றார். பிட்டுக்குமண்சுமந்ததைக் கூறுகையில், "வந்திபிட்டும்-பேறுடைய, பிட்டுக்காட் டாளும் பெருமையான்" என்று இறைவன் அடியார்க்கு எளியனும்பெருமையைத் தெரிவிக்கின்றார்.

சிவபிரான் தம் பழைய பொது இயல்பை நீத்துச் சிறப்பியல்பை மேற்கொண்டு சுந்தரபாண்டியராகி வந்தருளியசெய்தியை மிகவிரிவாகக் கூறுகின்றார் (13); சிவபெருமான் அமுதநாடு இருக்க ஆலவாய் உகந்து மட்டவிழ் கொன்றையை விட்டு வேம்பணிந்து நான்மறைக்கு ஒளித்து முத்தமிழ்க்கு இரங்கி வந்ததாகக்கூறும்பகுதியில் இன்சுவை ததும்புகின்றது. பன்றிக்குட்டிகளுக்கு அருளியதையும் நாரைக்கு முத்தி கொடுத்ததையும்பற்றிக் கூறும் பகுதிகள் அவற்றின் சாதி இயல்புகளை விளக்கித் தன்மைநவிற்சியணியமைதியோடு விளங்குகின்றன.

இந்நூலாசிரியர் அடியார்களிடத்து மிக்க பக்திபூண்டவர்; அவர்களுக்குத் தொண்டுசெய்யவேண்டுமென்னும் நோக்கம் உடையவர்; "நின், குடிவழித் தொண்டரடியினை விளக்கித், துவர்க்கலை தோய்த்துப் புலர்த்திக்கொடுத்துப், புதுத்துணைபம் புனலை முகந்துவந் தளித்துச், செம்மலர் கொணர்ந்து கைம்மலர்க் குதவி, அம்மலர் சொரிவார் சொன்முறை கேட்டு, [illegible] வணங்க செய்முறை வழுவா, தேவல்புரிந் தொழுகி

## IV

......நின்னை வேண்ட வென்னையாண் டருளே" (4) என்று வேண்டும் இவ்வாசிரியர், "வருந்த நோக்கித் திருந்தாண் மாறி, ஆடெனச் சொன்ன வருளுடைக் கோ" எனப் பாண்டியனையும், "திருப்பெய ரொன்றுற் செயிழை தடுப்ப, இளமை நீத்த வளமைத் தொண்டன்" எனத் திருநீல கண்டநாயனாரையும் பாராட்டுகின்றார். சிறுத்தொண்டரை, "கொள்ளைத் துயர்தீர் பிள்ளையைச் சமைத்துச், சுவையுற வூட்டு நவையறு மன்பன்" என்று சொல்லுகின்றார். "கொள்ளைத் துயர்தீர் பிள்ளை" என்ற தொடர் பிள்ளையின் அருமையையும் அத்தகைய அரியபிள்ளையின்பாலுள்ள அன்பினும் சிவபிரானிடத்திருந்த சிறுத்தொண்டரது அன்பின் மிகுதியையும் புலப்படுத்துகின்றது. "கண்ணிடந் தப்பு மண்ணல்" எனக் கண்ணப்பநாயனாரைப் பாராட்டுகின்றனர். இங்ஙனம் அடியார்கள்பால் ஈடுபட்ட இவர் ஓரிடத்து அவர்களுட் சிலர் செயலைப் பழிப்பது போலப் புகழ்ந்தெடுத்துக் காட்டுகின்றார்; "தந்தையைக் கொன்ற பிள்ளையு மல்லேன், பிள்ளையைக் கொன்ற தந்தையு மல்லேன், கல்லா லெறிந்திலன், வில்லாலடித்திலன், வதைத்திடு மூன்கொடுத் துதைத்திலேன்" (28) என்ற அடிகளில் முறையே சண்டேசர், சிறுத்தொண்டர், சாக்கியநாயனார், அருச்சுனன், கண்ணப்பர் என்னும் அடியார்களுடைய செயலைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலுள் அர்த்தநாரீசர் திருமேனி வருணனையும் (1), சொக்கநாதர் திருவுருவ வருணனையும் (7) அமைந்துள்ள பகுதிகள் சிவபெருமானுடைய பலவகைப் பெருமைகளையும் ஆற்றல்களையும் விளக்குகின்றன. அர்த்தநாரீசுவர உருவத்திற்குப் பசுங்கொடி படர்ந்த பவளக் கொம்பையும், மரகதத்தோடுகூடிய பளிக்கு மலையையும், புகையோடு சேர்ந்த கனற்கொழுந்தையும், இரண்டுநிறங்கொண்ட இந்திரவில்லையும் கார்க்கடலோடுசேர்ந்த பாற்கடலையும் உவமைகூறுகின்றார்.

மருதநிலத்தை மன்னனாகவும் மதுரையையும் வையையையும் பெண்களாகவும் உருவகம்செய்து அவ்வவற்றிற்கு ஏற்றவாறு செய்திகளைக்கூறி முடித்திருத்தல் (10, 28) [illegible].

4-ஆம் செய்யுளில் ஸ்ரீ அங்கயற்கண்ணம்மையையும் ஸ்ரீசொக்கநாதக் கடவுளையும் தரிசனஞ் செய்யுமுறை சொல்லப்படுகின்றது. மனிதர்கள் தம் பசிப்பிணியைப் போக்குவதற்காகச் செய்யும் பலவகைச் செயல்களும், பொலித்துறவிகளது தீயொழுக்கமும், அருமையறியாதாரிடம் சென்று புலவர்கள் துன்புறுதலும் அச்செய்யுளிற் கூறப்படுகின்றன. 7-ஆம் பாடலிற் சொக்கநாதரை வழிபடுவோர் பெறும் பேறும் வழிபடாதோர் படும் துன்பங்களும் சொல்லப்பட்டுள்ளன. தம்பால்வந்து புலவர்கள் செய்யுட்களைக்கூறுமளவும் கேட்டு இன்புற்று, பின் பொருளுதவியை அவர்கள் விரும்பினால் "முன்பு ஏன் நாம் சந்தோஷித்தோம்?" என்று நினைந்து முகத்திற் கோபக்குறிப்பைக்காட்டிக்கொண்டு அருகிலுள்ளாரை, "ஏன் இவரை உள்ளேவிட்டீர்?" எனச் சீறிவிழும் உலோபிகள் இயல்பை ஆசிரியர் இச்செய்யுளிற் சொல்லியிருக்கின்றார். 19-ஆம் பாட்டில் மனிதவாழ்வின் இயல்பும், நரகவேதனையும், சுவர்க்க இன்பமும் சொல்லப்படுகின்றன. இப்பகுதிகளில் வயிற்றை, "தூராச் சலதி தூரினுந் தூராப், படுகுழி" என்றும், முதுமையை, "காலுங் கோலாக் கண்களுங் கையா, அம்பியுங் கறையுந் தம்மெயி ருக்கும், மூப்பு" என்றுங் குறிப்பிடுகின்றார். திருவருளாலன்றி மனிதர்கள் முயற்சியினால் ஆவது ஒன்றுமில்லை யென்பதைப் பலவகை உதாரணங்களால் 22-ஆம் பாட்டில் விளக்குகின்றார்.

பின்னும் அவர் இடையிடையே பழமொழிகளையும் வழக்குச்சொற்களையும் எடுத்துக்கூறிச் சொல்லவேண்டிய செய்திகளைப் புலப்படுத்துகின்றார். இதனை "ஆனையுண்டகனி" (6), "பொற்கொழுவால் வரகுக்குழுதழுதே (9), "உழுந்துருள்போழ்து" (19), "கைத்தல நெல்லி" (22), "பொய்யுங் கதையுமாய்ப் போம்" (26) என்பனவற்றிற் காண்க.

சொக்கநாதரைக் கிளவித்தலைவராகக்கொண்டு பாடப்பட்ட செய்யுட்கள் சில; தலைவிகூற்று (15), பாங்கி மேகத்தைத் தூதுவிடுதல் (16), பூவையைத் தூதுவிடுதல் (20).

பொருளென்னும் பொருளில் பொருட்டு என்பதையும் (2), வளர்த லென்னும் தொழிற்பெயர்வாய்பாடாக வளர்வான் என்பதையும் (5), மிகத் துன்புறுத்தினீர் என்னும் பொருள்பட உறந்தீர் என்பதையும் (9) இவர் ஆளுகின்றார்.

இந்தப் பிரபந்தம் எழுதியிருந்த ஏட்டுப்பிரதியொன்று கும்பகோணம் காலேஜில் எனக்குமுன் தமிழ்ப்பண்டிதராக இருந்து விளங்கிய திரிசிரபுரம் வித்வான் ஸ்ரீ சி. தியாகராசசெட்டியாரவர்களிடமிருந்து கிடைத்தது. சற்றேறக்குறைய 200-வருடங்களுக்குமுன்பு எழுதப்பட்டிருக்கவேண்டுமென்பதை அதன் பழமை புலப்படுத்தியது. அப்பிரதியின் இறுதியில்,

"படைத்தாரை வேற்கண்ணி கண்ணீர்ப்ர வாகப் பரவைபொங்கி
உடைத்தா லடைக்க வுபாயமுண் டோகறை யூற்றுகொன்றைத்
தொடைத்தாம வேணியிற் சும்மாடு கட்டிச் சுமந்துசமந்
தடைத்தா லடைபடச் சொக்கே பிதுவைவை யாறல்லவே"

என்ற இனியசெய்யுள் எழுதப்பட்டிருந்தது. அதன் பின்பு திருநெல்வேலித் தெற்குப்புதுத்தெரு வக்கீல் ஸ்ரீ சுப்பையாபிள்ளையவர்கள் வீட்டிலிருந்து ஊர்க்காட்டுச் சாமிநாதவாத்தியார் என்பவருடைய பிரதியொன்று கிடைத்தது. இவற்றைக்கொண்டு, படிப்பவர்களுக்குப் பயன்படுமாறு நூதனமாக எழுதிய குறிப்புரையோடு இப்பிரபந்தம் இப்பொழுது பதிப்பிக்கப்பட்டது. இதனைச் செந்தமிழில் வெளியிட்டுதவிய பத்திராதிபர்களுடைய அன்பைப் பாராட்டுகின்றேன். இனித் தொடர்ச்சியாகப் பிரபந்தங்களையும், காப்பியங்களையும், இப்பத்திரிகை வாயிலாக வெளியிட்டு வரலாமென்பது எனது நோக்கம். திருவாலவாயுடையார் திருவருள் நிறைவேற்றவேண்டும்.

சென்னை
14-7-32.

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

---

# ஆசிரியர் வரலாறு.

இந்நூலாசிரியராகிய பலபட்டடைச்சொக்கநாதபிள்ளையென்பவர் சற்றேறக்குறைய 200 வருஷங்களுக்குமுன்பு மதுரையில் இருந்து வாழ்ந்துவந்தவர். இவருடைய மரபினர்கள் பலபட்டடைக் கணக்கு என்னும் ஒருவகை உத்தியோகம் பார்த்துவந்தவர்கள். இவருடைய தந்தையார் சொக்கலிங்கம்பிள்ளையென்பவர். "மதுரையிலிருந்த பலபட்டடைக்கணக்குச் சொக்கலிங்கம்பிள்ளை குமாரர் பலபட்டடைச் சொக்கநாதக்கவிராயர்" என்று பழைய ஏட்டுப் பிரதியொன்றில் காணப்படும் வாக்கியத்தால் இவர் சொக்கநாதக்கவிராயரென்றும் வழங்கப்படுவாரென்று தெரிகின்றது.

இவர் தந்தையார் பெயரையும் இவர்பெயரையும் பார்க்கும்பொழுது இவர் பரம்பரையினர் மதுரை ஸ்ரீ சொக்கநாதப்பெருமானிடத்து வழிவழியடிமைபூண்டவர்களென்று தோன்றுகிறது. இவர் அக்கடவுள்திறத்தில் இந்த மும்மணிக்கோவையையன்றி யமகவந்தாதி ஒன்றும், பல தனிப்பாடல்களும் இயற்றியுள்ளார். ஸ்ரீ அங்கயற்கண்ணம்மையைப்போற்றிச்செய்த தனிப்பாடல்களும் பல உண்டு. அவை இவருடைய அன்பின்மிகுதியாற் பாடப்பட்டவையாதலின், கேட்போர்களுக்கும் அன்பை உண்டாக்குவனவாக உள்ளன. இனிய எளிய நடையிலுள்ள இவரது தனிப்பாடல்களைப் படிப்பவர்களுக்குத் தமிழ்மொழியில் ஆர்வமுண்டாவதில் ஐயமில்லை. தமிழ்நாட்டுச் சிற்றூர்களில் அங்கங்கே சிலர் தமிழ்ப்பாடல்களைக் கூறியும் கேட்டும் தமிழின்பத்தை நுகர்வது வழக்கம். அங்ஙனம் கூறப்படும் பாடல்களுள் இவருடைய செய்யுட்கள் தலைசிறந்து விளங்கும்.

இவர் இராமேசுரத்தலத்திற்கு ஓருலா இயற்றியுள்ளார். அது தேவையுலாவென வழங்கும். அதன்கண் உள்ள சில செய்திகளால்,

அக்காலத்து இராமநாதபுரத்தரசாக இருந்தவர் விசயாகுநாதசேதுபதி யென்பவரென்று தெரியவருகின்றது.

திண்டுக்கல்லிற் கோயில்கொண் டெழுந்தருளிய ஸ்ரீபத்மகிரிநாதர் விஷயமாகத் *தென்றல்விடுதூது என்னும் ஒரு பிரபந்தம் இவர் இயற்றியுள்ளார்.

திருமாலிருஞ்சோலைமலை அழகர்மீது இவர் இயற்றிய கிள்ளைவிடுதூது ஒன்றும், கன்னிவாடியில் அக்காலத்தில் ஜமீன்தாராக இருந்த நரசிங்கநாயகர் மீது இயற்றிய வளமடல் ஒன்றும் உண்டு

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்திற் குரிய சிறப்புப்பாயிரச்செய்யுட்கள் இரண்டு இவராலியற்றப்பெற்றனவாகச் சில பழைய ஏட்டுச்சுவடிகளிற் காணப்படுகின்றன. அதனால் இவர் அப்புராணம் அரங்கேற்றியகாலத்து உடனிருந்துகேட்டு இன்புற்றவர்களுள் ஒருவரெனத் தெரிகின்றது.

---

*தேவையுலாவும் இதுவும் குறிப்புரையுடன் என்னாற்பதிப்பிக்கப்பட்டுள்ளன

63

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

### சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி | 1 | 8 | 0 |
| 3. | யாப்பணியிலக்கணங்கள் | 0 | 10 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு | 3 | 0 | 0 |
| 6. | மகாபாரதம் அரும்பதவுரையுடன் | 4 | 0 | 0 |
| *7. | தோத்திரத்திரட்டு | | | |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய. முதற்பாகம் | 6 | 0 | 0 |
| | ஷை இரண்டாம்பாகம் | 4 | 8 | 0 |
| | ஷை மூன்றாம்பாகம் | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய) | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் | 0 | 6 | 0 |
| 12. | அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் | 0 | 8 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா | 0 | 5 | 0 |
| 14. | தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி | 1 | 4 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை | 0 | 4 | 0 |
| * | சங்கப்புலவராற்றுப்படை உரையுடன் | | | |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) | 0 | 4 | 0 |
| | திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன | 0 | 1 | 0 |

### செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது உரையுடன் | 0 | 8 | 0 |
| 2. | களநால் (5) இனியதுநாற்பது (உரையுடன்) | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை | 0 | 3 | 0 |
| 6. | நேமிநாதம் (உரையுடன்) | 0 | 12 | 0 |
| *7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) | | | |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) | 0 | 8 | 0 |
| *9. | அநுமானவிளக்கம் | | | |
| 10. | அட்டாங்கயோகக்குறள் | 0 | 2 | 0 |
| 12.* | பன்னிருபாட்டியல் | | | |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் | 0 | 2 | 0 |
| 15. | திருச்செந்திற்கலம்பகம் | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா | 0 | 8 | 0 |
| 17. | சுகசர்தர்சனதீபிகை | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா | 0 | 3 | 0 |
| 20. | நரிவிருத்தம் | 0 | 2 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) | 0 | 8 | 0 |
| 22.* | திருக்கலம்பகம் (ஷை) | | | |
| 23.* | விக்கிரமசோழனுலா | | | |
| 24. | குருமொழிவினாவிடை | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை | 0 | 8 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 28.* | சந்திராலோகம் ... ... ... | | | |
| 29. | சோழவம்சசரித்திரச்சுருக்கம் ... ... | 1 | 0 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 31. | பாண்டியம் ... ... ... ... | 0 | 4 | 0 |
| 32. | மனீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 33. | வேளிர்வரலாறு ... ... ... | 0 | 8 | 0 |
| 34. | அகப்பொருள்விளக்கம் ... ... ... | 1 | 4 | 0 |
| 35.* | திருமந்திர நூறுபாட்டுக்குரை ... | | | |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 39. | பழமொழி மூலமும் பழையவுரையும்(முதல் 100 செய்) | 1 | 0 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்) | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடுந் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 49. | கடைவள்ளலார்காலம் ... ... ... | 0 | 6 | 0 |
| 50. | தமிழரும் ஆந்திரரும் ... ... ... | 0 | 4 | 0 |
| 51. | மதங்கசூளாமணி ... ... ... | 1 | 0 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் ... ... ... | 0 | 6 | 0 |
| | ஷை ஆங்கிலத்தில் ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்க நிகண்டு ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டு வெளியாகிவரும் "செந்தமிழ்"ப் பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4—8—0. இதுவரை 29 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாத்தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—12—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.